# மாதர் மறுமணம்

"MATHAR MARUMANAM."



மலர் 3. இதழ் 5.

வெகுதானிய மார்கழி

Annas 1½. 10 Cts.

# "மாதர் மறுமணம்"

## விற்பனை ஏஜெண்டுகள்.

1. இந்தியன் நாஷனல் நியூஸ் மார்ட், 89 சர்ச் ஸ்ட்ரீட். ஸ்லேவ் அயலண்ட், கொழும்பு.
2. நியூஸ் மார்ட் சப் ஏஜெண்ட், 8, 9 வார்ட் ஸ்ட்ரீட், கண்டி.
3. நவீன கதா புத்தகசாலை, மங்கமாரி வீதி, ரங்கூன்.
4. மு. முகம்மதலி, 208-A சிலிகி ரோடு, சிங்கப்பூர்.

---

## "மாதர் மறுமணம்" சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா இந்தியா, சிலோன் முதலிய உள்நாட்டுக்கு | ... | ரூ. 1—0—0 |
| பர்மா, மலாயா, சைகோன், தென்னுபிரிக்கா முதலிய வெளிநாட்டுக்கு | ... | ரூ. 1—8—0 |
| தனிப்பிரதி | ... ... | ரூ. 0—1—6 |

வி. பி. மூலம் அனுப்ப இயலாது. முன்பணமாகவே செலுத்த வேண்டும். வெளிநாட்டிலுள்ளவர்கள் 2 ஷல்லிங் 6 பென்ஸ் அனுப்ப வேண்டும்.

விலாச மாறுதலுக்கு சந்தா எண்ணைக் குறிப்பிட்டு கடிதமெழுதவும். மாதிரிப்பிரதி வேண்டுவோர் 1½ அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

காரியதரிசி,

மாதர் மறுமண சகாய சங்கம், காரைக்குடி.

# உள்ளுறை


விதவையின் பிரலாபம்! (பாட்டு)

செய்கோன் M. இராஜமாணிக்கம் .... 1

பெண் சுதந்திரம்

—டார்பன் திரு. ச. முனிசாமி பிள்ளை .... 2

விதவை கண்ணீர் வீட்டை அழிக்கும்

—மா. பெரியசாமி

வள்ளியம்மை கல்யாணம்

—கல்லுப்பட்டி எஸ். கல்யாணம் .... 8

வெடிகுண்டு —ப. நீ. .... 12

தற்காலப்பெண் —மிஸ் வி. ஸூரி .... 13

பெண்களும், சீர்திருத்தமும் —பீகம் அமீருதீன் .... 15

ராணி தாராபாய் .... 17

ஸெல்மா லாகர் லாப் .... 19

சாரதா சட்டம் ஹிந்துமதக் கொள்கைகளுக்கு விரோதமா?

—S. சத்தியமூர்த்தி .... 21

கெமால் அட்டா டர்க் .... 28

மாதர் மகாநாட்டுத் தீர்மானங்கள் .... 31

மாதர் கல்வி அபிவிருத்தி .... 32

பழிக்குப் பழி —M. M. .... 35

மாதர்களும், மதமும் —தி. நாராயணன் .... 37

பத்திராதிபர் குறிப்புகள் .... 39

நிகழ்ச்சிகள் .... 41

# குமரன் புத்தகசாலை.

### வ. உ. சிதம்பரம் பிள்ளை எழுதியது.

| | |
|---|---|
| மனம்போல வாழ்வு | 0-8-0 |
| திருக்குறள்(அறத்துப்பால்) | 1-0 0 |
| மெய்யறம் | 0-8-0 |
| சாந்திக்கு மார்க்கம் | 0-8-0 |
| அகமே புறம் | 0-8-0 |
| மெய்யறிவு | 0-8-0 |

### வ. வே. சு. ஐயர் எழுதியது.

| | |
|---|---|
| சந்திரகுப்த சரித்திரம் | 0-6-0 |

### மகேசகுமார சர்மா எழுதியது.

| | |
|---|---|
| வால்மீகி விஜயம் | 0-12-0 |

### இதர புத்தகங்கள்

| | |
|---|---|
| ஞான வாசிட்ட மூலமும் உரையும் 2 பாகமும் | 6-0-0 |
| நைடதம் மூலமும் உரையும் | 4-0-0 |
| சிதம்பர ரகசியம் | 0-8-0 |
| உப்பள முற்றுகை | 0-4-0 |
| பக்தியோகம் | 0-8-0 |
| தேவோபாசன தீபம் | 0-6-0 |
| பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை (சீர்திருத்தக்கதை) | 0-4-0 |
| மநுநீதி மர்மம் | 0-2-0 |
| ரோமியோ ஜூலியட் (ஷேக்ஸ்பியர் நாடகக் கதை செய்யுள்) | 0-4-0 |
| இகபரஞானசாகரத் திரட்டு | 0-6-0 |
| பெரிய விக்கிரமாதித்தன் கதை | 1-0-0 |
| தாசிகள் மோச வலை (நாவல்) | 1-4-0 |
| நந்தனார் கீர்த்தனை | 0-4-0 |
| தோத்திரக்கோவை | 0-6-0 |
| இராமாயண ஆராய்ச்சி | 0 4-0 |
| சொர்னவல்லி | 0-12-0 |
| கூழைராங்கன் | 0-12-0 |
| அமிர்தவல்லிமாலை | 0-4-0 |
| நமது பலசரக்குக்கடை | 0-6-0 |
| நாயன்மார் | 0-3-0 |
| குட்டிச்சாத்தான் கட்டுரைகள் | 0-3-0 |
| பதிற்றுப்பத்தந்தாதி | 0-3-0 |
| மாதர் மறுமணம் | 0-4-0 |
| பத்மநாதன் அல்லது களவு போன வைரப்பதக்கம் | 0-12-0 |
| மானநஷ்ட வழக்கு | 0-1-0 |
| ஜீவகாருண்யத்திருக்குறள் | 0-0.6 |
| ஜீவகாருண்யப் பாடல் திரட்டு | 0-3-0 |
| சந்திரமதி அல்லது தற்காலத்து தமிழ் மகள் | 0-2-0 |
| கைம்பெண்ணின் கண்ணீர் | 0-1-0 |
| தேசிய கீதங்கள் | 0-2-0 |
| காசில்லாமல் உபதேசம் | 0-1-0 |
| பலதிரட்டு | 0-1-0 |
| கடவுளும் கோயிலும் | 0-1-0 |
| சமரச சன்மார்க்க தோத்திரத்திரட்டு | 0-4-0 |
| சைவசமய சாரம் | 0-1-0 |
| சுயராஜ்யம் யாருக்கு? | 0-1-0 |
| மாதர் மறுமணம் பாடல் திரட்டு | 0-2-0 |
| அநியாயக் கல்யாணம் | 0-0-6 |
| இரண்டு கட்டுரைகள் | 0-1-0 |
| தமயந்தி நாவல் | 0-8-0 |
| சோதிடப் புரட்டு | 0-2-0 |
| சுயமரியாதைத் தாலாட்டு | 0-2-0 |
| புராண ஆபாசங்கள் | 0-3-0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0-2-0 |
| சுயமரியாதைத் தத்துவ கீதங்கள் | 0-3-0 |
| சுயமரியாதைப் பாடல் | 0-2-0 |

**மானேஜர், 'குமரன்' ஆபீஸ், காரைக்குடி.**

# மாதர் மறுமணம்.

பத்திராதிபர்:— மு. மரகதவல்லி.

| | | |
|---|---|---|
| மலர் 3 | காரைக்குடி<br>வெகுதானிய-௵ மார்கழி௴ | இதழ் 5 |


## விதவையின் பிரலாபம்!

(செய்கோன் M. இராஜமாணிக்கம்)

[பால்ய மணத்தால் வைதவ்ய மடைந்த ஓர் பெண் தன் தாயை நோக்கிப் பிரலாபிக்கிறது!]

### நேரிசை வெண்பா

1. எல்லோரும் இன்று எனைவிதவைப் பெண்ணென்று
சொல்கின்ற காரணமென்? தொல்லுலகில்—சொல்வாய்நீ!
அன்னாய்! எனக்கிந்த அந்நீதப் பேர்சூட்டல்
என்னே நியதி இது?

2. என்னைப்போ லுள்ளவர்கள் எல்லோரும் மங்களமாய்
வன்ன மலர்சூடி வாகுடனே—பின்னலிட்டு
ஆடுகின்றார்! பாடுகின்றார்! அன்னையே! யான்மட்டும்
வாடுகின்றேன்! என்னே வழி?

3. மஞ்சள் முகந்தீட்டி மையிட்டுப் பொட்டிட்டு
வஞ்சியர்கள் எல்லவரும் வாகுடனே—அஞ்சுகமாய்
அன்னாய்! இருக்க அவனிதனில் யான்மட்டும்
என்னகுறை செய்தேன்? இயம்பு!

4. பட்டிற் புடவை பலவிதமாய் எல்லோரும்
கட்டித் திரிகின்றார் கன்னிகையான்—மட்டுமிந்த
வெண்துணியே கட்ட விதிவந்த தேனம்மா?
மண்மீது ஈதென் மரபு!

5. தங்க அணிபூண்டுத் தாரணியில் எல்லோரும்
மங்களமாய் வாழ்கின்ருர் மாதெந்தன்—அங்கமதில்
ஓர்நகையும் இல்லையே! உள்ளம் துடிக்குதம்மா!
பார்மீதென் நீதி? பகர்!

---

# பெண் சுதந்திரம்

(தென்னுப்பிரிகா—டர்பன் திரு ச. முனிசுவாமி பிள்ளை)

ஆண்களுக்கு வாழ்க்கைத் துணைகளாக இருப்பவர்கள் பெண் மக்கள். உலகில் துன்பமின்றி இன்பம் அனுபவிக்க விரும்புவோர் எக்குலத்தவர்கள் ஆனபோதிலும் அவசியம் கல்வி கற்றிருத்தல் வேண்டும். அன்றேல், அவர் தம் வாழ்வு அத்தனையும் பெருந் துன்ப மயமே. ஆண் மக்கள் மட்டும் கற்றிருந்தாலும் போதாது. பெண் மக்களும் தக்க அறிவு வாய்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

நிற்க நம் இந்தியர்களுட் பெரும்பாலோர் பெண் கல்வி கூடாதென்ற துரபிப்பிராயம் உள்ளவர்களாக இருக்கின்றனர். 'அடுக்களைப் பெண்ணுக்குப் படிப்பேதுக்கு? எந்த ஆபீஸில் உத்தியோகம் பார்க்கப் போகிருள்?' என்று ஏதேதோ பிதற்றுவதோடும் நில்லாது, 'கற்ற கன்னியர் கணிகையராவர்; கற்பு முற்றிலும் போய்விடும். அத்துடன், அவர்கட்கு அறிவே கிடையாது; எவ்வளவு கற்றபோதிலும் நன்மையேற்படவே மாட்டாது' என்று ஜோஸ்யமும் கூறிவிடுகின்றனர். கல்வி கற்பதன் நோக்கமெல்லாம் 'ஆபீஸ்' உத்தியோகத்தின் பொருட்டேயென்று எண்ணும் இப்பேதைகளை என்னென்று சொல்வது? 'ஐயா! கற்பதெல்லாம் அறிவு பெறவேண்டியேயன்றி அவர் கூறுமாறு உத்தியோகம் பெறுவதற்காகமட்டுமல்ல. கல்வி கற்ருல் கற்பு என் போகும்? கல்விவேறு கற்பு வேருமா? நீங்கள், கற்ற மங்கையர் கற்பையிழப்பர் என்று சொல்வது சற்றேனும் பொருந்துமா? ஔவை, மதன மாலினி, காரைக்கால் அம்மை, சகுந்தலா முதலானவர்களெல்லாம் கற்பிழந்

தவர்களா? பெண் கல்வி முக்காலும் அவசியம். தேசாபிமானிகள் இதன் அவசியத்தைப்பற்றி முறையிடுகின்றனர். நம் பெண் மக்களும் 'எங்களுக்குக் கல்விவேண்டும்! கல்விவேண்டும்' என்று கத்துகின்றனர். சுப்பிரமணிய பாரதியாரும் இது விஷயமாக,

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்—புவி
பேணிவளர்த்திடு—மீசன்
மண்ணுக்குள்ளே சில மூடர்—நல்ல
மாதரறிவைக் கெடுத்தார்
கண்களிரண்டினி லொன்றைக்—குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்களறிவை வளர்த்தால்—வையம்
பேதைமை யற்றிடுங் காணீர்

என்று எல்லோர் மனமும் கேட்டதும் உருகுமாது பாடியுள்ளார்.

பெண்கள் சுயேச்சையாக ஒன்றுமே செய்தல் கூடாதாம். உண்பது முதல், கேவலம், உறங்குவதுவரையுள்ள ஒவ்வொரு காரியத்திலும் ஆடவர் சொற்கேட்டே நடக்கவேண்டுமாம். உயிர் போவதாக இருப்பினும் புருஷன் உண்டபின்னரே, அதுவும் அவரது எச்சில் இலையில் சாப்பிடவேண்டுமாம். இன்னும் அப்பெண்கள் கல்வி கற்பதுங் கூடாது. மாமன், மாமி, நாத்தி முதலானவர்கள் முன்னிலையில் நின்றுகொண்டு தன் சொந்தப்புருஷனோடு ஓர் மொழி பேசவுங் கூடாதாம். ஐயோ! பாவம்! ஒன்றா இரண்டா இப்பெண்கள் படும் துயரம்! ஏட்டில் அடங்காது எழுத முடியாது! தன் இஷ்டப்படி ஒருவனை மணஞ்செய்துகொள்ளவுங் கூடாது. சின்னஞ்சிறு பிராயத்திலேயே புருஷனை யிழந்தாலும் மறுமுறை விவாகம்செய்து கொள்வதுங் கூடாதாம்; தினந்தோறும் இரண்டு வேளை ஆகாரம் புசிக்கவும் கூடாது; வெள்ளை உடையையே உடுக்க வேண்டும். தலையை மொட்டையடிக்க வேண்டும், எதிரில் வந்தால் 'முண்டை வருகிறாள் கெட்ட சகுனம்' என்று நிந்திப்பது வேறு அந்தோ! கொடுமை! கொடுமை! ஆற்றொணுக் கொடுமை! பெண்களை நாயினும் பேயினும் தாழ்வாக நடத்துகின்றனர். இத்தகைய பேய்மக்கள் உயிரோடு உள்ளமட்டும் நம் பாரதம் முன்னேற்றம்

அடையவே மாட்டாது; வீடு திருந்தினல் நாடு தானே திருந்தி விடும்.

பெண்களுக்கு விடுதலை கொடுப்பதில் முக்கியமான ஆரம்பப் படிகள் எவை யென்ருல்:—(1) பெண்களை ருதுவாகுமுன்பு விவாகம் செய்து கொடுக்கக்கூடாது. (2) அவர்களுக்கு இஷ்டமில்லாத புருஷனை விவாகம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தக்கூடாது. (3) விவாகம் செய்துகொண்டபிறகு அவள் புருஷனைவிட்டு நீங்க இடங்கொடுக்கவேண்டும்; அதன்பொருட்டு அவளை அவமானப் படுத்தக்கூடாது. (4) பிதுரார்ஜிதத்தில் பெண் குழந்தைகளுக்கு சம பாகம் கொடுக்கவேண்டும். (5) புருஷன் இறந்த பின்பு ஸ்திரீ மறுபடி விவாகம் செய்து கொள்வதைத் தடுக்கவும் கூடாது (6) விவாகமே இல்லாமல் தனியாக இருந்து வியாபாரம், கைத்தொழில் முதலியவற்ருல் கௌரவமாக ஜீவிக்க விரும்பும் ஸ்திரீகளை யதேச்சையான தொழில்செய்து ஜீவிக்க இடங்கொடுக்க வேண்டும். (7) பெண்கள் கணவனைத்தவிர வேறு புருஷனுடன் பேசக்கூடாதென்றும், பழகக்கூடாதென்றும் பயத்தாலும் பொருமையாலும் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனையை ஒழித்துவிடவேண்டும். (8) பெண்களுக்கும் ஆண்களைப்போலவே உயர்தரக் கல்வியின் எல்லாக் கிளைகளிலும் பழக்கம் ஏற்படுத்த வேண்டும். (9) தகுதியுடன் அவர்கள் அரசாட்சியில் எவ்வித உத்தியோகம் பெற விரும்பினுலும் அதைச் சட்டம் தடுக்கக்கூடாது; (10) பெண்களுக்கும் ராஜாங்க உரிமைகளிலே அவசியம் பங்கு கொடுக்கவேண்டும்.

---

# விதவை கண்ணீர் வீட்டை அழிக்கும்

(மா. பெரியசாமி)

"பெண்ணுக்கு விடுதலை நீர் இல்லை யென்ருல் பின்னிந்த உலகினிலே வாழ்க்கையில்லை" என்ருர் நமது கவியரசர் பாரதியார். அன்பும், ஆண்மையும், ஆற்றலும், ஆர்வமும், நிறைந்த வீர வாலிப ஆண்மக்களே! மேற்கூறிய பாட்டின் கருத்தைப் பன்முறை

ஆராய்ந்து பாருங்கள்! பெண்மக்களை அடிமைப் படுகுழியில் கிடத்தி ஊனம் செய்யும் நாடு என்றேனும் நன்னிலையை அடைய முடியுமா?

ஔவைப் பிராட்டியார், வெள்ளி வீதியார், காக்கைப் பாடினியார், காரைக்காலம்மையார், மங்கையர்க் கரசியார், கண்ணகியார், மணிமேகலையார் போன்ற பெண்மணிகளை ஈன்ற தமிழ் நாடு இன்று பெண்ணடிமை யென்னும் பெரும்பழிக்கு ஆளாகி அல்லலுறுவதை எண்ணுகையில் அம்மம்மா, நெஞ்சம் வெடித்து விடும் போல் தோன்றுகிறது. பெண்ணும் ஆணும் எண்ணில் நிகரே என்ற உண்மையறிவை யிழந்த யாதவ சமூக பழங்கொள்கை விடோமென்று பித்துப்பிடித்த பெரியோர்களே நீங்களும் உங்கள் மக்களும் என்றுதான் உண்மையை உணரப்போகிறீர்கள்? நமது முன்னோர்கள் பெண்மக்களைப் போற்றிப் புகழ்ந்து வாழ்ந்து வந்தார்கள் என்பதற்கு கலைமகள், திருமகள், பூமகள் என்பதாக அவர்கள் பெண்மணிகளை அழைத்து வந்தது ஓர் சான்றல்லவா? கலைமகளாகவும், திருமகளாகவும், பூமகளாகவும் வாழ்ந்து வந்த பெண்மணிகளின் நிலை இன்று எத்தகைய கீழ் நிலையில் இருக்கின்றது! பெண்கள் சிறு பருவத்தில் தாய் தந்தையர்கட்கும், பின் கணவருக்கும், அப்பால் பிள்ளைகளுக்கும் அடங்கி வாழவேண்டுமாம். பிற ஆடவரைப் பெண்கள் கண்ணால் பார்க்கவும் கூடாதாம். ஆண்கள் மட்டும் எது வேண்டுமானாலும் அவரவர் இஷ்டத்துக்குச் செய்யலாமாம். பெண்களுக்கு அடுப்பங்கரையே வானுலகாம். கல்வி என்பது என்னவென்றே பெண்கள் அறியமாட்டார்கள். லாயத்தில் அடைபட்ட குதிரைக்காவது கனைக்கும் உரிமையுண்டு. ஐயோ! அருமையோடும், அன்போடும் நம்மைப் பெற்று வளர்த்த தாய்க்கும், உரிமையோடு நம்மைத் தூக்கி வளர்த்து ஊக்கமூட்டிய நமதருமைச் சகோதரிகளுக்கும் உயிரொத்த காதலிகளுக்கும் உயிரற்ற வீர ரத்தம் ததும்பாத கூட்டத்தினிடை அவர்களின் மனத்துயர்களை உரக்கச் சொல்லி ஆற்றுதல் கூடக் கூடாதென்றல்லவா வாய்ப்பூட்டுச் சட்டம் போடப்பட்டிருக்கிறது? என்ன கொடுமை! பெண்மணிகளைத் தெய்வமென்று ஓதும் தமிழ் நூல்களுக்கு எதிரிடையாக ஆறு

காற்று, யானை, புலி, காலன், கள்வன், நஞ்சு முதலியவற்றை நம்பலாம்; பெண்மணிகளை நம்பக் கூடாதென்ற போலி நூல்கள் ஒழியும் நாள் எந்நாளோ அந் நாளே நன்னாள். ஆணவங்கொண்ட ஆண்களிடம் அடிமைப்பட்டு அல்லலுறும் அருமைத் தாய்மார்களே! இனியேனும் உங்கள் கைவிலங்கைக் கழற்ற முயலுங்கள். மக்களுக்கு கல்வியே கண்ணெனக் கூறிய பெரியோர் மொழிப்படி நீங்கள் பள்ளிகளுக்குச் செல்லவும் உரிமையற்றிருக்கிறீர்கள். இயற்கை இன்பங்களைக் கண்டு களிக்கவும் வழியின்றி கூண்டில் அடைபட்ட கிளியைப்போல் துயருறுகின்றீர்கள். அறியாப் பருவத்தில் தாலியென்ற சரடு உங்கள் கழுத்தில் மாட்டப்படுகிறது. அறுபது ஆண்டுகள் நிறைந்த கிழவனே உங்கள் கணவனாக வந்த போதிலும் நீங்கள் மறுத்துக்கூற உரிமையற்றவர்களாகி விட்டீர்கள். கலியாணம் செய்துகொண்ட பெரியவர் இரண்டொரு ஆண்டில் இறந்துவிட்டால் ஐயோ நீங்கள் உங்கள் வாழ்நாள் முழுதும் பூவிழந்து, பொலிவிழந்து, மணமிழந்து, நல்லாடை இழந்து, அணிகலமிழந்து, அறுசுவை உணவிழந்து அவதியுற வேண்டுமாம். வயது நிறைந்த தாய்-தந்தையர்களும், உறவினர்களும், சகோதர சகோதரிகளும் காதற்கடலில் ஆடி மகிழும் போது, இளம்பெண்கள் தங்கள் ஐம்புலன்களையும், சகல சுக போகங்களையும் எவ்வாறு அடக்கியாள முடியும்? மதி நுட்பமில்லாத அறிவிலிகள் விதவைப் பெண்களை விபசாரிகள் என்றும், குச்சுக்காரிகள் என்றும், பழிகாரிகள் என்றும், ஜாதியைக் கெடுக்கவந்த சண்டாளிகள் என்றும் வாய்க்கு எட்டியதை எல்லாம் பேசுகிறார்கள்.

மறுமணஞ் செய்யும் உரிமை பெண்களுக்கு இல்லையென மறுக்கும் நம் சமூக நிலைமையை சற்று சிந்தித்துப் பாருங்கள். மயிரெலாம் வெள்ளிக் கம்பியென நரைத்துக் கூன்விழுந்து கையில் தடியூன்றி காடு வா வீடு போவெனத் தள்ளாடி விழும் நிலையில் உள்ள நீ, செப்புச்சிலை போன்ற இளம்பெண்ணை மணத்தல் என்ன நீதி? என்ன ஒழுக்கம்? ஏ தாத்தாவே! உன் பிடரியில் இருக்கும் காலன் உன்னைக் கடிதில் கொண்டு சென்று விட்டால் உனக்குக் கழுத்துக் கொடுத்த கன்னியின் நிலை யாதாகும்? நீ இறந்த பின் அப்பெண் தன் இயற்கை உணர்ச்சிகளை அடக்க முடி

யாத போது திருட்டுத் தனமாக அலையும் காளையொருவனுடன் கூடிக் குழந்தை பெற்றுக் குளம், குப்பை, சந்து, பொந்து, காடு, மேடுகளில் எறிந்து சிசு வதைக்கும் கொடும் பாவத்திற்கும் ஆளாவதை அறியாயா? நீ இறந்த பின் உன் பெண்சாதி அல்லது பிள்ளை உன் மோக்ஷத்திற்காக அமாவாசைவிரதம்,அன்னதானம் கோதானம், பூதானம் என்ற எத்தனையோ தான தருமங்கள் செய்கிறார்கள். அப்படிச் செய்தாலும் இந்த சிசுக் கொலைக்கு ஈடாகுமா? உன் மனது கல்லா இரும்பா? இரக்கச் சித்தம் இல்லையா? இரத்தக் கண்ணீர் பெருகாதா? கிழவனுக்கு வாழ்க்கைப்பட்ட கிளிமொழிகள் எத்தனை பேர் தங்கள் இயற்கையான ஆசையைத் தணித்துக்கொள்ளக் கள்ளக் காதலருடன் மர்ம வாழ்க்கை நடத்துகின்றார்கள்? இது உன் தள்ளாத பருவத்தால் ஏற்பட்ட தவறல்லவா? உன் தவறைநீ உணராமல் 'கைப்பிடி நாயகன் தூங்கையிலே' எனக் கவியெழுதப் புறப்பட்டதை எண்ணும்பொழுது அறிவுடைய உலகம் உன்னை எள்ளி நகையாடுகிறதே. உனக்கு ஏற்பட்ட காம இச்சை இறைவன் முதல் உயிருள்ள வஸ்துக்கள் பூராவுக்கும் உண்டென நீ நினைத்து பெண்கள் கழுத்தில் பொட்டுக் கட்டி அவர்களை வேசையர் என்று பழிக்கச்செய்ததும் நீயல்லவா? இன்று அத்துயரை நீக்க முன் வந்துழைக்கும் பேரறிவாளர்களும் விடாமுயற்சிக்காரர்களும் பற்பல தனிச் சமூகங்களும் வீர வாலிபர்களும் பிரயாசை எடுக்கின்றார்களே அவர்களையாவது நீ குறைகூறாமல் இருக்கின்றாயா? பெண்களை நீ அடிமைப் படுத்துந்தோறும் நீயும் அடிமைப் பட்டுக்கொண்டே வருகிறாய் என்பதை இனியேனும் உணர்ந்து கொள். "நிலத்தின் தன்மை பயிர்க்குள தாகுமாம். நீசத் தொண்டும் மடமையும் கொண்ட தாய், தலத்தில் மாண்புடை மக்களைப்பெற்றிடல் சாலவும் அரிதாவதோர் செய்கையாம்" என்ற பாரதியாரின் மொழியைப் பன் முறை உன்னிப்பார். தையலர் விடுதலை வையக விடுதலை என்பதை இனியேனும் அறிந்து கொள். பெண்மணிகளின் அடிமை விலங்கைத் தகர்க்க இன்றே எழுந்திரு. பெண்மணிகளை நாம் அடிமைப் படுத்தியதாலேயே நீதிக் கடவுள் வெள்ளையர்களை நம் நாட்டிற்கு அனுப்பி நம்மை அவர்களுக்கு அடிமையாக்கினர் என்ற பெரியார் கோபால கிரு

ஷ்ண கோகலேயின் பொன்னுரையைஇனியேனும் எண்ணிப்பார். பெண் விடுதலையிலேயே உன் விடுதலையும் அடங்கியுள்ளதென நினைந்து அடிமையகற்ற ஆண்மையுடன் வீறு கொண்டெழு! அன்று தான் நம் தாய்நாடும் நம் சமூகமும் இன்ப நிலையெய்தும். எனது அன்புமிக்க வீரவாலிபர்காள்! வீரத்துடனும் நெஞ்சில் ஈரத்துடனும் நல்ல தீரத்துடனும், விடா முயற்சியுடனும் யாது வரினும் பின்னுலே திரும்பிப் பாராமல் பின்னடையாமல் மறும ணத்திற்கு மாருது உழைக்க முன்னணியில் வருவீர்களாக.

வந்தேமாதரம்!

---

# வள்ளியம்மை கல்யாணம்

(கல்லுப்பட்டி எஸ். கல்யாணம்)

ராமனுதன் பெட்டியடியில் பேரேடு பதிந்துகொண்டிருந்த போது தபால்காரன், "தபால்" என்று சொல்லிக்கொண்டே ஒரு சிவப்புக் கடிதத்தைக் கொடுத்தான். அது அவனது அம்மான் மகள் வள்ளியம்மைக்கும் சோலையூர்த் தனவந்தவர்களுள் ஒருவ ரான, நாற்பது வயது நிரம்பிய வெங்கடாஜலம் செட்டியாருக்கும் நடக்கப்போகும் திருமணத்தைத் தெரிவிக்கும் திருமண அழைப்பு திருமணத்திற்கு இன்னும் பதினைந்து நாட்களே யிருந்தன. வள்ளி யம்மை நல்ல அழகி. குணவதியுங்கூட. அன்பே உருவாயமைந்த் ஒரு எந்திழை. ராமனுதனும் வள்ளியம்மையும் வேலம்பட்டியில் இளமையில் ஒன்ருய்ப் பள்ளியில் பயின்றவர்கள். ஒருவரை யொரு வர் உயிர்போலப் பாவித்து வந்தவர்கள். அறிவுநிறைந்த அவளும் ஆற்றல்மிகுந்த இவனும் பின்னர் ஒருவரை யொருவர் காதலித் தது இயற்கையே யன்ருே? இருவரும், வேறு எவரையும் மணப்ப தில்லை யென்ற உறுதிகொண்டனர். வள்ளியம்மையின்பெற்ருேரும் மற்றவர்களும் வள்ளியம்மையை இராமநாதனுக்கே மணம் செய்வ தெனத் தீர்மானித்திருந்தனர். ஆனுல் எல்லாம் நாம் நினைக்கிறபடி யா நடந்துவிடுகின்றன! கடிமணமே நடக்கும் தனவணிக சமூ கத்தில் காதல் மணம் ஒன்று நடப்பது தெய்வத்துக்குச் சம்மத

மில்லைபோலும்! பல காரணங்களினால் வள்ளியம்மையின் தகப்பனார் வீரப்ப செட்டியாருக்குத் திடீரென்று பணமுடை ஏற்பட்டது. பெண்ணுக்குப் பணம் வாங்கிச்செய்வதன்மூலம்தான் தனது பணமுடையை நிவர்த்திசெய்யலாமென்று அவருக்குத் தோன்றிற்று. ஆகவே கடைசியில், நாற்பது வயது நிரம்பிய வெங்கிடாசலம் செட்டியாருக்கு வள்ளியம்மையை இரண்டாந்தாரமாக, நான்கு வராகன் வாங்கிக்கொண்டு செய்வதென்று தீர்மானித்தார்.

வெங்கிடாசலம் செட்டியார் உண்மையில் நாற்பது வயதே நிரம்பியவரானாலும், பார்ப்பதற்கு அதிக வயதானவர்போல் காணப்படுவார். வண்டி விரட்டிலும் இழுவைச் சீட்டிலும் அபார மோகங்கொண்டவர். ஒருமுறை வண்டிவிரட்டில் வண்டி குடங் கவிழ்ந்து, அவர் முகம் கட்டாந்தரையில் விழுந்ததினால், அவருடைய முன்பற்களில் ஏழெட்டு பறிபோய்விட்டன. பகல் வேளையில் எப்போதுபார்த்தாலும் இழுவைச்சீட்டு போட்டுக்கொண்டுதானிருப்பார். எப்பொழுதும் வண்டிவிரட்டைப் பற்றியும் இழுவைச் சீட்டைப்பற்றியுமே சிந்தித்துக்கொண்டிருப்பார். கனவில்கூட பலதரம் "அடே காரிக்குட்டைக்கி'நறுக்'கென்று ஒரு தார் போடடா, பில்லைக்காளையைச் சட்டத்தில் தட்டி ஒதுக்குடா" என்றாவது, அல்லது "அடேடே துடுப்பு ஆசை அடியடா மடையா!" என்றாவது கத்துவார்.

எல்லாவற்றையும் அறிந்திருந்த ராமனாதன் இவைகளையெல்லாம் நினைத்தான். எப்படியாவது இக்கல்யாணத்தை நடைபெறாமல் தடுத்து, தானே வள்ளியம்மையை விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்று எண்ணினான். ஏற்கனவே சில தினங்களில் தாய்நாடு செல்ல ஆயத்தமாயிருந்த ராமனாதன் மறுநாள் புறப்படும் கப்பலில் தாய்நாட்டுக்குப் புறப்படுவதென்று கடைசியில், தீர்மானித்தான்; அதன்படியே கடை அதிபரின் அனுமதிபெற்று மறுநாள் கப்பலில் பிரயாணமானான்.

ஃ ஃ ஃ

அவனை வீட்டில் எல்லோரும் உவகையுடன் வரவேற்றனர். ராமநாதன் அயல்நாட்டிலிருந்து வந்துசேர்ந்த செய்தியறிந்த, வள்ளியம்மையின் தமயன் மெய்யப்பன், ராமனாதனைக் கண்டுபோவ

தற்காக வந்தான். மெய்யப்பன், பதினறே வயது நிரம்பிய தனது ஆருயிர்த்தங்கையை, ஒரு அவலக்ஷணத்துக்கு—பொக்கைவாய்க் கிழவனுக்குக் கட்டுவதை மிகவும் அதிகமாக வெறுத்தான். தான், ராமனுதனைத் தவிர வேறு யாரையும் மணக்க முடியாதென்றும், 'இப்பொழுது நடக்கப்போகிற கல்யாணத்தை எப்படியாவது நிறுத்திவிட வேண்டு'மென்றும் தன் தங்கை தன்னிடம் சொன்னதாக மெய்யப்பன் ராமனுதனிடம் கூறினன். இருவரும், இக்கல்யாணத்தை எப்படி நிறுத்துவதென்று ஆலோசித்தனர்.

கடைசியில் மெய்யப்பன், தான் எப்படியாவது தனது தங்கையையும் தன் மனைவியையும் கூட்டிக்கொண்டு கல்யாணத்திற்கு முதல்நாள் மதுரைக்குப் போய்விடுவதாகவும், ராமனுதன் தனது நண்பர்கள் சிலருடன் அங்கு வந்ததும் மதுரை மீனுக்ஷியம்மன் கோவிலிலேயே ராமனுதனுக்கும் வள்ளியம்மைக்கும் விவாகத்தை அதே முகூர்த்தத்தில் நடத்திவிடலாமென்றும் சொன்னுன்.

கல்யாணத்திற்கு முதல்நாளிரவு சுமார் பத்துமணிக்கு அவர்கள் ஏற்பாட்டின்படியே மெய்யப்பன் தனது தங்கையையும், தன் மனைவியையும், "தன் பேத்தி வள்ளியம்மையை ராமனுதனுக்கே செய்யவேண்டு"மென்று தன் மகளுடன் சண்டைபோட்ட தனது பாட்டியையும் கூட்டிக்கொண்டு காரில் மதுரைக்குப் புறப்பட்டான். ராமனுதன் தனது நண்பர்கள் சுமார் 20 பேர்களையும், அவ்வூர் சீர்திருத்த விவாக சங்கத்தின் தலைவர், காரியதரிசி, அங்கத்தினர்கள் ஆகியவர்களையும் உடனழைத்துக்கொண்டு மதுரைக்குப் புறப்பட்டான். மறுநாள் மீனுக்ஷியம்மன் கோவிலில் ராமனுதனுக்கும் வள்ளியம்மைக்கும் மாலை மாற்றுக்கல்யாணம் சிறப்பாக நடைபெற்றது. ஒரு குரூப் போட்டோவும் எடுக்கப்பட்டது.

உடனே அன்று மாலையே ராமனுதன் வள்ளியம்மை முதலிய யாவரும் ராமனுதன் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். சரியான ஜோடிக்குத்தான் விவாகம் நடந்தேறிவிட்டது என்று எண்ணி எல்லோரும் ஆனந்தமடைந்தனர்.

அவமானமும் ஆத்திரமும் அடைந்த மாப்பிள்ளை வீட்டாரும் பொக்கைவாய் மாப்பிள்ளையும் உடனே சோலையூருக்குப் புறப்பட்டு

விட்டனர். வெளியில் சொன்னால் வெட்கம் என்று அவர்கள் இதைப்பற்றியே ஒன்றும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை.

வீரப்ப செட்டியார் முதலில், நான்கு வராகனையும் திருப்பிக் கொடுக்க நேரிடுமேயென்றும், மாப்பிள்ளை வீட்டாருடன் வீண் மனஸ்தாபம் ஏற்படுமேயென்றும் கவலைப்பட்டாராஞலும் எல்லாம் தன், மகள் மகன் முதலியவர்க ளெண்ணப்படியே நடந்துவிட்டதைப்பற்றி அப்புறம் ஆயாசப்படவில்லை.

சில தினங்களுக்குப் பிறகு ராமனுதனுக்கு ஐரிஷ் லாட்டரியில் ரூபாய் ஐம்பதினுயிரம் கிடைத்தது. அதினின்றும் தனது மாமனுருக்குப் பணவுதவி செய்ததன்மூலம் அவரது பணமுடையை ராமனுதன் நிவர்த்திசெய்தான்.

ஃ ஃ ஃ

என் அறைக்குள் வேகமாய் வந்த பழனியப்பன் (சிறுகதையெழுதியிருந்த) கட்டுரைத் தாட்களை வெடுக்கென்று பிடுங்கி வாசிக்க ஆரம்பித்தான். வாசித்தபிறகு என்னைநோக்கி சிரித்துக் கொண்டே, "எனக்கும் சிவகாமிக்கும் மதுரையில் விவாகம் நடந்த விருத்தாந்தத்தை அப்படியே சிறு கதையாக எழுதிவிட்டாயே! நல்ல ஆளப்பா நீ" என்ருன். நான் பசக்கென்று அதை வாங்கி மடித்து கடித உறையினுள் வைத்து ஒட்டினேன்.

---

தலை நிமிர்ந்தனம் சமவுரிமைகள்
தர்ம நியாயமாய்த் தாவென்போம்!
விலை யடிமையைப் போலினி வாழ்கிலோம்;
வெற்றிபெற வழி பெற்றுவிட்டோம்!

—சுவாமி சுத்தானந்த பாரதியார்.

# வெடி குண்டு

(ப. நீ.)

இத்தாலி அபிசீனியாமீது குண்டுபோட்டது. ஸ்பெயின் கலகத்தில் குண்டுமாரி. ஜப்பான் சைன சண்டையில் வெடிகுண்டு மயம். இதுதானு? ஐரோப்பிய நாட்டிலே, ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் இப்பொழுது வெடிகுண்டு. இப்பவோ இன்னும் சற்று நேரத்திலோ யாராவது வந்து வெடிகுண்டைப் போட்டால் என்ன செய்வது? இந்த கிலி மேலே நாட்டாரை நன்குபற்றிக் கொண்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

கீழ்நாட்டில்—இந்தியாவில், பெண்கள் உள்ளத்தில் 'வெடி குண்டு'. கீழ் ஜாதியினரென ஒதுக்கித் தள்ளப்பட்ட பலரை நீக்கி, மிக, மிக 'உயர்ந்த' சிலரிடமே இந்த வெடிகுண்டு பயம் இருக்கிறது. அல்லது அவர்கள் தலைமீது 'வெடிகுண்டு' கட்டித் தொங்கவிடப் பட்டிருக்கிறது. எந்த நிமிஷமோ அது அறுந்து விழலாம். யார் கண்டது?

ஃ ஃ ஃ

வெடிகுண்டு விழுகிறது. அதன் பலனை அனுபவிக்கிறார்கள். குண்டுவிழுந்தபோது அந்த அபாயகரமான—வெடிகுண்டால் தாக்கப்பட்ட சிறுமியின்—அவஸ்தையைக் கண்டபோது "ஏன்தான் இந்தப் 'பாழாய்ப்போன' வெடிகுண்டை ஏற்படுத்தினர்களோ?" என்று எல்லோரும் சொல்கிறார்கள். அப்படி இப்படி சில நாட்களானவுடனே "அது" அவளுடைய தலையெழுத்தாகி 'விதியாகி' அழிக்கமுடியாத 'லிபி'யாக அந்த பாழாய்ப்போன கண்களுக்குத் தோன்றுகிறது.

ஃ ஃ ஃ

இந்த பயங்கரமான வெடிகுண்டு பிறர் தலைமீது விழும் பொழுது நாம் பச்சாதாபப் படுகிறோம். பிறகு அது அவளுடைய தலை விதி என்றும், கடவுளிடம் வாங்கி வந்த வரமென்றும் கூறி வர்ணம் பூசுகிறோம். இந்தப் பயங்கரமான வெடிகுண்டிருக்கிறதே—இது பொல்லாதது. என்றைக்காவது ஒரு நாள் தலையில்

விழுந்துதானாகும் (விழாமல் சுமங்கிலிகளாக இருப்பதில் நமக்கு ஆக்ஷேபணையில்லை). அப்பொழுது பிறருக்குச் சொன்ன—அவர்கள் வாங்கிவந்த வரத்தைத்தானே இவர்களும் வாங்கி வந்திருக்க வேண்டும்?

ஃ ஃ ஃ

இந்த வெடிகுண்டுத் தொல்லையை ஒழித்து விட்டால் எல்லோரும் நிம்மதியாக இருக்கலாமல்லவா? இதற்கு வழி எல்லாப் பெண்களும், சுமங்கிலிகளும் சேர்ந்து விதவா விவாகத்தை ஆதரிக்க வேண்டும். "ஐயோ பாவம்! அது அவள் தலை விதி" என்ற ஒன்றுக்கும் உதவாத சோம்பேறித்தனமான பேச்சை உதறித் தள்ள வேண்டும்.

ஃ ஃ ஃ

ஒரு பாவத்தையுமறியாத விதவைகள்—தங்கள் விருப்பத்தை மனதிற்குள்ளே வைத்து மக்கிக்கொண்டிருப்பதில் பயனில்லை. அது உடலைக் கெடுக்கிறது—உள்ளத்தைக் கெடுக்கிறது—தீய வழிக்கு இழுக்கிறது. உங்கள் எண்ணத்தை—விருப்பத்தை தைரியமாக வெளியிடுங்கள். அதுதான் நேர்மையானது. விருப்பம் நியாயமானது. சரியானது. "நியாயமற்றது" என்று சொல்லுபவர்கள், ஈவு இரக்கமில்லாத—உயிரற்ற...............கல்நெஞ்சர்களே.

---

# தற்காலப் பெண்

(மிஸ் வி. ஸூரி)

"அடுக்களையை ஒரேயடியாக மூடிவிட்டு வெளியே வர விரும்புகிறாள் நவீனப் பெண். குழந்தைகள் தனது சுதந்திரத்திற்குப் பாரமாயிருப்பதால் அவற்றை வெறுக்கிறாள். தனது விருப்பப்படி நடக்கும் புருஷனைப் பெறுவதே லட்சியமெனக் கருதுகின்றாள். தனது விஷயத்தில் புருஷன் தலையிடக் கூடாதென்று நினைத்தால்,

அவன் தலையிடக் கூடாது! நவீனப் பெண்ணுக்கு மதம் பிரயோஜனமற்றது. அவளுக்கு சினிமா பைத்தியம். வீட்டிலிருப்பதைவிட, விருந்துகளுக்கும் வேடிக்கைகளுக்கும் செல்லவே ஆசைப்படுகின்றாள்"—இவ்வாறெல்லாம் நவீனப் பெண்களைப் பற்றி குறை கூறப்படுகிறது. ஏதோ ஒன்றிரண்டு பேர்களை உதாரணமாகக் கொண்டு பொதுப்படையாக இப்படி அபிப்பிராயப் படுவது தவறாகும். படித்த பெண்களில் பெரும்பாலானவர் நமது சமூக வாழ்வுக்குப்பெரும் ஆஸ்தி போலிருக்கின்றனர் என்பதைக் குறை கூறுவோர் மறந்து விடுகின்றனர்.

கல்வி மூலம் அவள் வாழ்க்கையைப் பகுத்தறிவுக் கண் கொண்டு பார்க்கின்றாள். பழய மூடப் பழக்க வழக்கங்களையும், மூட நம்பிக்கைகளையும் அவள் பயன் படுத்தாதது அதிர்ஷ்ட வசமாகும்; தற்கால சமூக அமைப்புடன் அவை பொருந்தவில்லை. முன்னேற்றத்துக்கு உரைகல் பகுத்தறிவுதான் என அவள் கருதுகிறாள். சடங்குகளும், சம்பிரதாயங்களும் பிற்போக்குக்கு அறிகுறி. குடும்பப் பொறுப்பை அவள் நன்கு தெரிந்திருக்கிறாள். மனதில் பட்டதை வெளிப்படையாகச் சொல்லும் தைரியம் உண்டு.

குடும்ப வாழ்க்கையில், வீடு சுத்தமாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறாள். குடும்பச் செலவில், தேவையான வழிகளில் செலவிட்டு, மீதப்படுத்த வேண்டிய இனங்களில் க்ஷேமித்து வைக்கிறாள். குறுகிய மனப்பான்மையும் பொறுமையும் இல்லை.

முன்காலப் பெண்களைவிட இக்காலப் பெண், கல்யாண விஷயத்தை மிகுந்த சிரத்தையுடன் ஆலோசிக்க வேண்டிய விஷயமாகக் கருதுகிறாள். முன் காலப் பெண்களுக்கு இவ்விஷயத்தில் பேசுவதற்கே இடங் கிடையாது. தான் நேரில் பார்த்திராத, ஒருவரோடு இணைக்கப்படுவதை அவள் விரும்பவில்லை. இவ்விஷயத்தில் தற்காலப் பெண் நடந்துகொள்ளும் முறை, தனது தாய் தந்தையரின் கோபத்தைக் கிளப்புகின்றது. இதனால், பலவிதமான, முறையற்ற கண்டனங்களுக்கு ஆளாக நேரிடுகிறது.

கற்றறிந்த பெண்ணுக்குப் பொருளாதார சுதந்திரம் தேவை. அதை அடைவதையே அவள் தனது லட்சியமாகக் கொண்டிருக்

கிறாள். புதுமைப் பெண்ணின் நவீனக் கருத்துகளைக் கண்டிப்போர், அவளுடைய விருப்பங்களைக் கொஞ்சம் அனுதாபத்துடன் கவனிக்க வேண்டும். அவள் தான் ஒரு பரிபூரணச்சிறப்பு வாய்ந்தவளென்று சொல்ல வரவில்லை. எல்லா மனிதப் பிறவிகளையும் போன்று குறை பாடுகளுடையவள்தான். எனினும், தன்னையும் தன் சுற்றுச் சார்புகளையும், சமூகத்தையும், தேசத்தையும் அபிவிருத்தி செய்வதே அவளது முக்கிய விருப்பமாகும்.

---

# பெண்களும், சீர்திருத்தமும்

(பீகம் அமீருதீன்)

சென்ற நவம்பர் மாதம் சென்னையில் நடைபெற்ற மாதர் மகாநாட்டில தலைமை வகித்து பீகம் அமீருதீன் நிகழ்த்திய பிரசங்கத்தில் அடியில் வருமாறு குறிப்பிட்டார்:—

நம் முன்னிற்கும் பிரச்னைகளில் கட்டாயக் கல்வி முறை நமது கண் முன்னே முக்கியமானதாகப் புலப்படுகிறது. வார்தாக் கமிட்டி இதுபற்றி ஒரு புதிய திட்டத்தைத் தயாரித்திருக்கிறது. ஆனால், பெண்கள் சம்பந்தப்பட்ட வரையில், நான் பெரிதும் ஏமாற்றமடைந்துவிட்டேன். ஏனெனில், அத்திட்டத்தில் பெண்களின் தேவைக்குத் தக்கபடி வழிசெய்யப்படவில்லை. உதாரணமாக பையன்களுக்கு ஏழு வருஷப்படிப்பு கட்டாயமாக வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பெண்களுக்கு ஐந்து வருஷக் கட்டாயப் படிப்பே குறிப்பிட்டிருக்கிறது.

வார்தாத் திட்டம் சில பள்ளிக்கூடங்களில் பரீக்ஷார்த்தமாக அமுலுக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தத் திட்டம் மாகாண முழுமையும் அமுலுக்குக் கொண்டுவர பல வருஷங்கள் பிடிக்கும். இதற்கிடையில் ஸ்தல ஸ்தாபனங்கள் தங்கள் அதிகார எல்லைக்குள் கட்டாயக் கல்வியைக் கொண்டு வரும்படி நாம் வற்புறுத்த வேண்டும்.

சென்னை நகரில், பெண்கள் உயர்தரக் கல்விக்குக் கூடுமான வசதிகள் செய்யத் தேவையிருக்கிறது. கல்யாண வயது உயர்த்தப்

பட்டுவிட்டதால், பெண்களிடையே உயர்தரக்கல்வி கற்கவேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், போதுமான வசதிகளில்லாக்குறை, பலர் தங்கள் ஆவலைப் பூர்த்தி செய்ய முடியாமல் தடுத்திருக்கிறது.

உயர்தரக் கல்வியின் அவசியத்தை வற்புறுத்தும்போது, பெண் பட்டதாரிகள் தாங்கள் கற்றறிந்ததை முன்னைவிட அதிகமாகப் பயன்படுத்த வேண்டியதையும் இங்கு வற்புறுத்த விரும்புகிறேன்.

கல்வி பெறுவதோடு அதன் லட்சியம் முடிவடையவில்லை. இன்னொரு உயர்ந்த லட்சியத்தை அடையும் வழியே கல்வி. பெண்கள் தங்கள் குடும்பங்களை இன்பகரமாகவும் அழகாகவும் அமைக்கட்டும். ஆனால், அவர்களது முயற்சி இதர துறைகளிலும் செல்ல வேண்டும். சௌகரியமுள்ள வகுப்புப் பெண்கள், சமூக ஊழியத்தில் கொஞ்சகாலமாவது செலவிடவேண்டுமென்று வற்புறுத்தும் சட்டம் இயற்றப்பட வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

பெண்களெல்லாம் ஐக்கியத்தையே விரும்புகிறார்கள். ஆகவே பாஷைகளின் ஐக்கியத்தையும் அவர்கள் விரும்புகிறார்கள். இந்த மாகாணத்தில் ஹிந்துஸ்தானியை எதிர்த்துச் செய்யப்படும் கிளர்ச்சி பெண்கள் மனதை மாற்றாதென நான் நம்புகிறேன். ஏனெனில், இன்னொரு பாஷையைக் கற்பது சுதேச பாஷைகளைப் பாதிக்கும் என்று பயப்படக் காரணமில்லை. இன்று, தென் இந்தியா, தேசத்தின் இதர பாகங்களோடு பேசமுடியவில்லை; இந்தக் கஷ்டம் நிவர்த்திக்கப்படவேண்டும்.

சமூக விஷயங்களில் பெண்களுடைய கவனத்தை இந்நாளில் பெரிதும் கவர்ந்து நிற்பது பலதார மணத்தடை தான். பல மனைவியர்களைக் கொண்டிருப்பது, அநாகரிக காலத்தின் அறிகுறியாகும். பெண்கள் ஆண்களோடு சம அந்தஸ்துக்கு உயர்த்தப்பட வேண்டுமென்றால், பெண்களைத் தட்டு முட்டுச் சாமான்கள் மாதிரி கருதும் பலதார மண முறை ஒழிக்கப்படவேண்டும்.

ஸ்ரீமதி சுப்பராயனுடைய மசோதாவைப்பற்றிய என்னுடைய அபிப்பிராயமென்னவென்றால் நீதி முறைப்படி தம்பதிகளைப்

பிரித்து வைப்பதைவிட, விவாஹத்தையே ரத்துசெய்துவிட வசதி செய்வதே மேலாகும். இதனால் இரு கட்சியாரும் தங்கள் இஷ்டம் போல மணஞ் செய்யவோ செய்யாமலிருக்கவோ இடமேற்படும்.

பலதார மணம் மிகக் குறுகிய முறையிலேயே நடைபெற்று வருகிறது. ஆனால், இந்து சமூகத்தில் அதிகமாக நடைபெற்று வரும் இன்னொரு கொடிய பழக்கம் இருக்கிறது. அதுதான், கிழவர்களுக்குச் சிறு பெண்களை மணமுடித்து வைப்பது. பத்து வயதுக்குக் குறைந்த 'குழந்தை விதவைகள்' இந்நாட்டில் பதினாயிரம் ஜனத்தொகைக்கு சுமார் 50 பேர் வீதமிருப்பதாகச் சொல்கிறார்கள். வயதுப் பொருத்தமற்ற மணங்களே இதற்குப் பெரும்பாலும் காரணமாகும். இந்தமாதிரி மணங்களைத் தடுக்கப் பொதுஜன அபிப்பிராயம் உருவகப்பட்டு வருவது காலத்தின் அறிகுறியாகும்.

பரோடாவில் இது சம்பந்தமாகப் போதிய சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் இந்திய மாகாணங்கள் சிலவற்றிலும் இது சம்பந்தமாக மசோதாக்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மாகாணத்திலும் இம்மாதிரி சட்டங்கள் கொண்டுவரவேண்டியது அவசியமாகும். பெண் மைனராயிருக்கும்போது, கலியாணம் செய்யும் புருஷனுக்கும் பெண்ணுக்கும் வயதில் இருபதுக்குமேல் வித்தியாசமிருக்கக் கூடாதென்று விதி செய்யவேண்டும்.

---

# ராணி தாராபாய்

முன் காலத்தில், இந்தியப் பெண் திலகங்கள் பலர் சீரும் சிறப்பும்பெற்று நாடாண்டது மன்றி, போர்த்திறமை பெற்று, தாமே நேரில் போர்க்களங்களில் படைகளுக்குத் தலைமை வகித்துப் போரிட்டும் தங்கள் வீரத்தையும் தீரத்தையும் நிலைநாட்டியிருக்கின்றனர் என்பதற்கு இந்திய சரித்திரத்தில் பல சான்றுகளைக் காணலாம்.

வீரம் மிக்க மராட்டியர் வம்சத்திலே பிறந்த ராணி தாராபாயின் சரித்திரம் இச்சான்றுகளில் ஒளி பொருந்திய மணியாக

மிளிர்கின்றது. அக்காலத்தில், மொகலாய ஆட்சியையும் விட, மராட்டியர் கை ஓங்கி வலுத்ததற்கு இவ்வரசியின் புத்தி கூர்மையும் போர்த்திறமையும் காரணங்களாகு மென்பது மிகையன்று.

பட்டத்துக் குரியவனும் சிவாஜியின் பேரனுமான ராஜா ஷாஹு மொகலாயரிடம் சிறைப்பட்டிருந்தான். ஆட்சிபுரிந்த தலைவன் ராஜாராம் நாட்டைத் தனது மனைவி தாராபாய் வசம் ஒப்புவித்து விட்டு, பீரார்மீது படையெடுத்துச் சென்று, போரில் தோற்று அங்கேயே மாண்டுபோனான். அவனுக்குப் புதல்வர்கள் இருவர். மூத்தமகன் ஆட்சியேற்க மைனராக விருந்தபடியால் அவன் பேரால், அன்னை தாராபாய் ரீஜண்டாக ஆட்சி செலுத்தி வந்தாள். ஆனால், அந்த மகனும் பெரியம்மை கண்டு பிரிந்தான். எனவே, நீண்டகாலம் ராணி தாராபாயே, சகல பொறுப்புகளையும் ஏற்று ராஜ்யபாரத்தை நடத்த நேர்ந்தது. இது, அவளுக்கு நல்ல அனுபவத்தை அளித்தது. ராணுவ நிர்வாகத்திலும், ஸிவில் நிர்வாகத்திலும் அவள் அதிகத் தேர்ச்சிபெற்று, புகழடைந்தாள்.

அந்தக்காலத்தில் மொகலாயர்கட்கும், மராட்டியர்க்கும் சதா போர் நிகழ்ந்து கொண்டேயிருந்தது. ஆதலால் ராணி தாராபாய், அரசேற்றதும், எதிரிகள் புகமுடியாத மலைப் பிரதேசத்தினுட் புகுந்து, தன் சக்தியை வலுப்படுத்திக் கொண்டாள். படைகளைத்திரட்டி, எதிரிகளை விடாது தாக்கிவந்தாள். இதன்பயனாக, மராட்டியர் முன் இழந்த பிரதேசங்களிற் சில திரும்பவும் அவள் வசம் கிடைத்தன.

அவுரங்கசீப், தனது திறமை மிக்க படைத் தலைவர்களைப் பெருஞ்சேனையுடன் அனுப்பினான். ஆனால், தாராபாயின் ராணுவத் திறமைமுன் இந்தப் பெரும்படைகள் எதிர்த்து நிற்கமுடியாமல் தோற்றுப்போயின. நாளுக்குநாள் மராட்டியர் பலமடைந்து வந்தனர்.

ஒன்றுசேர்ந்து தொல்லை விளைத்துவரும் மராட்டியர்களைத் தோற்கடித்துச் சிதறடிக்கவேண்டுமென்று மொகலாய மன்னன் முயற்சித்தான். முடிவில் ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. சூரத் நோக்கி ஒரு படை சென்றுகொண்டிருந்தது. இதை மொகலாயர் படை

தடுத்துத் தாக்கியது. கடுமையான போர் நிகழ்ந்து முடிவில் மொகலாயர் வெற்றிபெற்றனர்.

காணாத வெற்றியைக்கண்டுவிட்ட மகிழ்ச்சி மொகலாயருக்கு. இந்த அபூர்வ வெற்றியை அவர்கள் எவ்வளவு விசேஷமாகக் கொண்டாட முடியுமோ அவ்வளவு ஆடம்பரத்துடன் கொண்டாடத் தீர்மானித்தனர். படை முகாமுக்கு வெளியே, எதிரிகள்மீது உளவுபார்க்க நியமிக்கப்பட்டிருந்த போர்வீரர்களும் இந்த கொண்டாட்டத்தில் கலந்துகொண்டனர். ராணுவ ஒழுங்கு நியதி கைக்கொள்ளப்படவில்லை. இவ்வாறு மொகலாயர் படை மெய்மறந்து வெற்றிக் கொண்டாட்டத்தில் மூழ்கித் தத்தளித்துக்கொண்டிருந்த பொழுது, எங்கிருந்தோ சூறாவளிமாதிரி மராட்டியர் அவர்கள்மீது பாய்ந்தனர். மொகலாயர் அணிவகுத்து நிற்க நேரமில்லை. எதிரிகளை எதிர்த்து நிற்க சந்தர்ப்பமில்லை. மராட்டியர் குதிரைப்படை அவர்கள்மீது உக்கிரத்துடன் பாய்ந்து சின்னாபின்னப்படுத்திற்று. ஒரு பெண்ணரசியின் ராணுவத்திறமைக்கு முன், வீராதிவீரர்களின் பலம் தலைகுனிந்தது. கடைசிவரை தாராபாய் சதாரா கோட்டையில் தனது ராஜ்யத்தை நிலைநாட்டி, ராணியாக விளங்கினாள். அவளுடைய காலத்தில் மராட்டியர் பலம் மேலும் மேலும் அதிகரித்துவந்து ஒரு பெரிய சாம்ராஜ்யமாகப் பரந்தது. இறப்பதுவரை அவள் ஒரு ராணியாகவேயிருந்தாளென்பதும் குறிப்பிடத்தக்கது.

---

# ஸெல்மா லாகர்லாப்

ஒரு பெண்மணி, அதுவும் கொஞ்சம் அங்கவீன முடையவள். அறுபது லட்சம் ஜனங்களே பேசக்கூடிய ஒரு பாஷையில் நாவலெழுதி, அதில் இருபது லட்சம் பிரதிகள் விற்றாள் என்றால், அவளுக்கு நோபல் பரிசு கிடைத்தது ஆச்சரியமா? உலகிலிருக்கிற பெண் இலக்கிய கர்த்தாக்களிலெல்லாம், மிகுந்த வெற்றியைப் பெற்றவர் ஸெல்மா லாகர்லாப் எனும் பெண்மணி. இவருக்கு இப்பொழுது எண்பது வயதாகிறது.

ஸ்வீடன் தேசத்தவர். நாலு வயதில் நோய்ப்பட்டு, அதன் பயனாக, கால்களின் உபயோகத்தை இழந்தார். குடும்பமே

மிகுந்த இலக்கிய அறிவு மிகுந்தது. பலர் பற்பல நவீனங்களை எழுதியிருககின்றனர். ஸ்வீடிஷ் இலக்கிய வளர்ச்சிக்கு அவர் குடும்பம் அதிகத்தொண்டு புரிந்திருக்கிறது.

அவர் பல நவீனங்களை எழுதியிருக்கின்றார். ஆனால், எல்லாவற்றிலும் சிறந்து அவருக்கு அழியாப் புகழைத் தேடிக்கொடுத்தது கோஸ்ற்ரு பெர்லிங்ஸ் ஸாகா என்ற நாவல் தான். நாவல் மட்டுமல்ல, பல இனிய கவிகளும் இயற்றியிருக்கின்றார்.

1890ல், 'இடன்' எனும் பத்திரிகை, சிறந்தகதைக்குப் பெரிய பரிசளிப்பதாக அறிவித்தது. ஸெல்மா தமது நாவலின் ஒரு பகுதியை அனுப்பினார். பரிசு அவரது நாவலுக்குக் கிடைத்தது. இந்த நாவலுக்கு அவ்வளவு மதிப்பு கிடைப்பதற் குரிய காரணங்கள் பல. கதாபாத்திரங்க ளெல்லாம் அவ்வளவு இயற்கையாக அமைந்திருந்தன. நடை மிகஎளியதாக அமைந்திருந்தது. இயற்கை வர்ணனைக ளெல்லாம் சாதாரணமாக அந்நாட்டில் காணப்படும், காட்சிகளாகவே தென்பட்டன. வெறுங் கட்டுக்கதைகளா யிருப்பினும் படிப்போர் மனத்தில் சரித்திரம்போற்படும்படி கதை அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த நாவலைத் தொடர்ந்து வேறு எத்தனையோ கதைகள் வெளிவந்தன. எனினும் அதன் மதிப்புக் குறையவில்லை. தனது ஜீவித காலத்திலேயே பேரும் புகழும் பெற்றுவிளங்குகிறார் இந்த ஆசிரியை. சர்வ கலாசாலைப் பட்டங்களும், தங்கமெடல்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. 1909ல் இலக்கியத்துக்குரிய நோபல் பரிசும் வழங்கப்பட்டது.

---

**கருணை உள்ள இடத்தில் - விதவை இல்லை.**

# சாரதா சட்டம் ஹிந்துமதக் கொள்கை களுக்கு விரோதமா?

(S. சத்யமூர்த்தி)

நம் இந்து மதத்தின் கொள்கைகளுக்கு அஸ்திவாரமாகவுள்ளது பராசராருடைய ஸ்மிருதியே. இவருடைய ஸ்மிருதியே இப்பொழுதும் கையாளப்பட்டு வருகின்றது. அதில் ஓரிடத்தில் கன்னி கழிந்த பின்பு பெண்களுக்கு (அதாவது யுவதிகளுக்கு) மணமுடிப்பது ஆக்ஷேபிக்கப்பட்டிருக்கின்றது. இதையே ஆதாரமாக வைத்துக்கொண்டு இன்று அநேகர் சாரதா சட்டத்தை ஆக்ஷேபித்து வருகின்றார்கள்.

விவாக பந்தம் சிறு குழந்தைகளின் விளையாட்டல்ல. மிகப் புனிதமானதும் உயர்வானதுமான ஓர் தெய்வத் தன்மையுள்ள உடன்பாடாகும். புராதன சூத்திரகாரர்களுடைய அபிப்பிராயத்தின்படி வித்யாப்யாசம் முடிந்த பின்னரே ஆடவர்கள் விவாகம் செய்துகொள்வதுதொன்றுதொட்டுநடந்துவரும் வழக்கமாயிருந்து வருகிறதெனத் தெரிகின்றது. ஆனால் பெண்களின் விவாக வயதைப் பற்றியொன்றுமே கூறப்படவில்லையா? பண்டைக் காலங்களில் ஆண்களும் பெண்களும் இல்லற வாழ்க்கையில் ஈடுபடு முன் பூரண கல்வியறிவு பெற்றிருந்தார்கள். இக்கருத்தின் ஆதாரத்தை வைத்துக்கொண்டு பண்டைக் கால விவாஹ வரலாறுகளைச் சிறிது ஆராய்ச்சி செய்தால் பெண்களின் விவாக பருவம் நமக்கு ஒருவாறு புலனாகும்.

## ரிக்வேத விவாகங்கள்

ரிக்வேதம் மிகத் தொன்மையானதும் பரிசுத்தமானதுமான ஓர் ஸாஸ்திரப் பொக்கிஷமாகும். அதில் "சூர்ய சூக்த" மென்றோர் பகுதி. அதுவே விவாக மந்திரங்களாகும். சூரியனுக்கும் சந்திரனுக்கும் விவாகம் நடப்பது போல் வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. விவாக சம்பந்தமான பழக்க வழக்கங்களை அதிலிருந்து ஒருவாறு அறியலாம். அதன் சாரம்சமாவது:— (1) மணமகள் மணமகனுடைய வீட்டிற்குச் சென்றாள். (2) அப்புதிய வீட்டிற்கு

அவள் வரவேற்கப்பட்டாள். (3) அவளிடத்திலுள்ள தோஷங்கள் நிவர்த்தியாவதற்காகப் பிரார்த்தனை. (4) பாணிக்கிரகணமும்—அதாவது விவாக உடன்படிக்கை—தெய்வ வழிபாடும். (5) தம்பதிகளின் சுக வாழ்வுக்காகப் பிரார்த்தனை. (6) வீடு லக்ஷ்மீகரமாயும் பரிசுத்தமாயும் விளங்க வேண்டுமென்று பிரார்த்தனை. (7) இருவருடைய இதயமும் ஐக்கியப்பட வேண்டுமென்று இறுதியாகப் பிரார்த்தனை. ஆனால் மணமகள் யுவதியா இல்லையா என்ற குறிப்பு எங்கும் சொல்லப்படவில்லை. எனினும் மணமகள் மணமகனுடைய வீட்டிற்குச் சென்றாளென்பதிலிருந்தும், விவாகம் ஆன உடனேயே வீட்டின் எஜமானியாக விளங்குவதினின்றும், அவள் ஒரு யுவதி என்றே தெரிகின்றது. சூர்ய சூக்தத்தின் பிரகாரம் ரிக்வேத காலத்தில் ஓர் நாள் விவாகம்தான் நடைபெற்று வந்திருக்கிறதென்றும், விவாகம் மணமகன் வீட்டிலேயே நடந்து வந்திருக்கின்றதென்றும் நிதர்சனமாகத் தெரிகிறது.

## ‘க்ருஹ்ய சூத்திர’ காலம்.

சிறிது காலம் சென்றதும் “க்ருஹ்ய சூத்திரம்” தோன்றியது. இதை மாக்ஸ் முல்லர் என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். அக்காலத்தில் நடந்துவந்த இல்லற வாழ்க்கையைப்பற்றி இதில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. சில மதாசிரியர்களைப் பின்பற்றுபவர்கள் வருஷத்தின் ஒரு குறிப்பிட்ட பருவக் காலத்தில் விவாகம் நடத்திவந்தார்களென்றும் மற்றும் சிலர் தமது ஆசாரியர்களின் கட்டளைப்படி வேறு பருவ காலங்களில் விவாகம் செய்து வந்தார்களென்றும் குறிப்பிடுகின்றது. மணமகன் மணமகளைத் தேர்ந்தெடுப்பதற்காகத் தன் நண்பர்களையனுப்புகின்றான். நண்பர்கள் சுலோகங்களைப் பாடிக்கொண்டே செல்கின்றார்கள். வதூவரர்களைத் தேர்ந்தெடுப்பதில் குணத்திற்கும், அழகிற்கும், புத்திசாலித்தனத்திற்கும் முக்யத்துவமளிக்கப்பட்டு வந்தது. அதில் ஜாதகங்களை ஒப்பிட்டுப்பார்க்கும் வழக்கம் அப்பொழுதிருந்து வந்ததாகக் குறிப்பிடவில்லை. மணமகள் தேர்ந்தெடுப்பது கஷ்டமாயிருந்தால் திருவுளச் சீட்டுப் போட்டுத் தேர்ந்தெடுத்துவந்தார்கள். மணமகள் நிச்சயமான

பின்பு இளம்பெண்கள் சிலர் மணமகனைப் பெண்ணின் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். தென்னிந்தியாவில் தாலி கட்டுவதென்பது முக்கியமாகக் கருதப்பட்டு வந்ததெனினும் சூத்திரங்களில் சொல்லப்படவில்லை. முதல்நாள் விவாகம் மணமகளின் இல்லத்தில் நடைபெறும். அன்றிரவோ அல்லது அடுத்தநாள் இரவோ இருதரப்பாருடைய சௌகரியப்படி அதே ஊரிலோ அல்லது பக்கத்து ஊரிலோ உள்ள மணமகனின் இல்லத்திற்கு இருதரப்பாரும் போய்ச்சேருவார்கள். பிரயாணத்திற்காக அதிக மந்திரங்கள் உண்டு. மணமகனின் வீட்டை அடையும்வரை மந்திரங்கள் ஓதப்படும். மணமகளுக்குப் புடவையொன்றும் ரவிக்கை யொன்றும் மணமகனால் அளிக்கப்படுகின்றன. விவாக காலத்தில் மணமகள் பூணூல் தரித்துக்கொள்கிறாள். புரோஹிதரோ அல்லது சுற்றத்தாரோ வதூவரர்களின் தலைகளைச் சேர்த்து வைக்கின்றார்கள். தின்பண்டங்களும் மதுவும் தம்பதிகளுக் களிக்கப்படுகின்றன. மணமகள் வீட்டிலிருந்து பிரயாணம் ஆரம்பிக்குமுன் அன்றிரவு ஸ்திரீகள் நான்குமுறை நர்த்தனம் செய்கின்றார்கள். விருந்தில் பசுக்கள் பலியிடப்பட்டன. தம்பதிகள் சேர்ந்து படுக்க அனுமதிக்கப்படுகின்றார்கள். ஆனால் விவாகத்திலிருந்து 3 இரவுகள்வரை தேக சம்பந்தம் கூடாதென்று நிபந்தனை விதிக்கப்படுகின்றது. மணமகன் வீட்டில் நடைபெறும் நான்காவது நாள் விவாகச் சடங்கிற்குச் "சதுர்த்தி கர்மன்" என்று பெயர். அதன்படி தம்பதிகள் தேக சம்பந்தம் வைத்துக்கொள்கின்றார்கள்.

மேற்கண்ட விவரங்களிலிருந்து விவாகம் ஒருபகுதி மணமகள் வீட்டிலும் மற்றொரு பகுதி மணமகன் வீட்டிலுமாக நடந்து வந்ததென்றும், எனவே விவாகச் செலவுகளும் இருதரப்பாருக்கும் ஏற்பட்டிருந்தனவென்றும் தெரிகின்றது. விவாகம் முடிந்தவுடனேயே தம்பதிகள் இல்லற வாழ்க்கையில் ஈடுபடுவதினின்றும் அக்காலத்திய மணமகள் கன்னிகழிந்த ஸ்திரீயிருந்தா ளென்றும் அறியலாம்.

## மாறுதல் தலைகாட்டுகின்றது

நாளடைவில் மேற்கண்ட முறையில் சில மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அது சமயம் தக்க ஆதாரமும், காரணங்களும்

இருப்பதாகத் தோன்றியதால் கன்னி கழிவதற்கு முன் க்ருஹ்ய சூத்திரத்தைச் சார்ந்த சிறு பெண்களுக்கு விவாஹம் செய்வதைக் கொண்டார்களெனத் தெரிகின்றது. இத்தகைய பால்ய விவாஹத்திற்கு ஆதரவாயிருந்து பிரசாரம் செய்து வந்தவர்கள், மானவர் வராஹர், ஹிரண்யகேசின், கோபிலர் என்ற நான்கு சூத்திரகாரர்களாவர். ஆனால், இந் நான்கு சூத்திரகாரர்களே அவர்களுடைய சூத்திரங்களில் விவாஹத்தின் பின்பு 3 நாட்கள் வரை தேக சம்பந்தத்தை நிவர்த்தித்து நான்காவது தினம் சதுர்த்தி கர்மங்களைச் செய்யவேண்டியதி னவசியத்தைக் குறிப்பிடுகின்றனர். இதிலிருந்து பால்ய விவாஹம் சில சூத்திரகாரர்களால் அனுமதிக்கப்பட்டு வந்ததென்றும், சாதாரணமாய் கன்னி கழிந்த பின்பு விவாஹம் செய்வதே வழக்கத்திலிருந்து வந்ததென்றும் புலனாகின்றது. கன்னி கழிந்த பின்பு விவாஹம் செய்வதே நெடுநாட்களாக பரம்பரையாகக் கையாண்டுவந்த வழக்கமாயிருந்து வந்திருக்கிறது. இரு வித விவாஹங்களும் ஒரே காலத்தில் சேர்ந்தாற்போல நடந்து வந்திருக்கின்றன. அக்காலத்திற்முன், பெண்களுக்கு யௌவன தசையடைந்த பின்பு விவாஹம் செய்வது உசிதமா? அல்லது கன்னி கழியுமுன்பே விவாஹம் செய்வது உசிதமா? என்பது பற்றி அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

## யுவதிகளின் விவாகத்தையொழிக்க முயற்சி

இதன் மத்தியில் பருவ காலத்தில் பெண்களுக்கு விவாஹம் செய்யும் வழக்கத்தை யொழிக்க தீவிரமான முயற்சிகளும் பலத்த பிரசாரங்களும் நடந்து வந்திருக்க வேண்டுமென்று யூகிக்க இடமேற்படுகின்றது. பிரசாரத்தின் மூலமாகவே தான் எவ்வித மாறுதலும் அனுபவத்திற்கு வர சாத்யமாகின்றது. பண்டைக்காலத்தில் கல்வியறிவு படைத்தவர்கள் மிகச் சொற்பம். கற்றறிந்தோரின் மொழிகளே வேதவாக்கியம். சமூகத்தில் படித்திருந்தவர்களுக்குள்ள மரியாதையும் அளவிடற்கரிது பொது ஜனங்களின் அறியாமை, பிரசாரர்களுக்குப் பெருந்துணையாயிற்று. "ஆடவர்கள் பருவகாலத்தையடைவது போலவே பெண்களும் பருவகாலத்தை அடைகின்றனர் 10 வயதான ஒரு பெண் பருவமடைந்தாலும் சரி; அடையாவிட்

டாலும் சரி; அவள் ஒரு ராஜஸ்வலையே (யுவதியே). பருவமடையு முன் பெண்களுக்கு மணம் செய்விக்காத உறவினர்களை ஜாதிப் பிரஷ்டம் செய்யுமாறு பொது ஜனங்கள் தூண்டப்பட்டனர். இங்ஙனம் செய்யாதவர்கள் கடவுளுடைய கோபத்திற்குப் பாத்திரமாவார்கள் என்பதே அவர்கள் நடத்திவந்த பிரசாரத்தின் சாராம்சம். க்ருஹ்ய சூத்திரங்கள் யுவதிகளுக்கு மணம் புரிவிப்பதையே ஆதரிக்கின்றன. க்ருஹ்ய சூத்திரகாரர்களைச் சேர்ந்த ஆபஸ்தம்பர் முதலியவர்கள் பராசரருக்குப் பிந்தியவர்கள். பராசரர் ஸ்மிருதியிலுள்ள 7-வது காண்டம் 6-வது அத்தியாயம் 10-வது பிரிவு உண்மையாயின் ஆபஸ்தம்பர் முதலிய சூத்திரகாரர்கள் (பராசருருடைய அபிப்பிராயத்திற்கு மாறாக) பால்யஸ்திரீகளுக்கு மணம் புரிவிப்பதை ஆதரித்திருக்க இடமில்லை. பண்டைக் காலத்தில் அச்சுஇயந்திரங்கள் கிடையா. கையெழுத்துப் பிரதிகளே யிருந்தன. அவைகள் உரிமைபெற்ற சிலருடைய கையிற் சிக்கியிருந்தன. ஜனங்களுடைய அஞ்ஞானமும், அவர்களுக்குத் தெய்வத்திடமும் சாஸ்திரங்களிடமும் உள்ள பயபக்தியும் பிரசாரகர்களுக்குத் துணைபுரிந்தன. எனவே பிரசாரகர்கள் கன்னி கழிவதற்கு முன் பெண்களுக்கு விவாகம் செய்வதை வற்புறுத்தும் பிரிவை ஸ்மிருதியின் நடுவே புகுத்தி விட்டார்கள். அத்தகைய புகுத்தப்பட்ட பிரிவுகள் உபந்யாச காலங்களில் பொது ஜனங்களுக்கு எடுத்துரைக்கப்பட்டன. பிரசாரம் பலனளிக்கத் தவறவில்லை. மனுஸ்ருமிதி தகுதியுள்ள மணமகனை நிச்சயிக்க வேண்டுமென வற்புறுத்துகின்றது. தவிர, தகுதியான மணமகன் கிடைக்காவிடில் ஆயுள் பூராவும் பெண்ணை வீட்டில் வைத்திருந்தாலும் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனல் போதாயன ஸ்மிருதி மணமகன் தகுதியுள்ளவனுயிருக்க வேண்டுமென்பதைப் பொருட்படுத்தவில்லை. யாருக்கு விவாகம் செய்து கொடுத்தாலும் சரி பெண்ணுக்குக் கன்னி கழியுமுன்பு மணமுடித்து வைத்துவிட்டால் அதுவே போதுமானது. போதாயனருடைய ஸ்மிருதி ஜனங்களுடைய மனதில் வேரூன்றியது. எனவே பருவமடைந்த பின் பெண்களுக்கு விவாகம் செய்யும் வழக்கமொழிந்து பால்ய பருவத்திலேயே மணம் செய்வது அனுபவத்தில் வர ஆரம்பித்தது. இதற்குப் பொது ஜனங்கள் சாஸ்திரத்திலும் தெய்வத்தி

னிடத்திலும் கொண்டிருந்த விஸ்வாசமும் பயபக்தியுமே காரண மாகும்.

ஜோதிஷம் நம் இந்தியாவின் மிகப்புராதன கலைகளிலொன்று. எனினும் க்ருஹ்ய சூத்திரத்தில் ஜோதிஷத்திற்கும் விவாகத்திற் கும்—தற்காலம் சம்பந்தப்படுத்தி யிருப்பதுபோல்—எவ்விதப் பொருத்தமும் கூறப்பட வில்லை. பால்ய விவாகம் நடைமுறையில் வரவே ஜோதிஷத்தின் உதவியும் நாடப்பட்டிருக்க வேண்டு மென்று ஒருவாறு யூகித்தறியலாம். ஏனெனில் வதூவரர்கள் சிறுவர்களாயிருக்கின்றபடியால் வதூவரர்களை நிச்சயிக்கும் பொறுப்பு பெற்றோர்களைச் சார்ந்து விட்டது. எனவே ஜோதிஷத் தினுதவிகொண்டு வதூவரர்களை நிச்சயிப்பது வழக்கத்தில் வந்தி ருக்கின்றது. ஆராய்ச்சியாளர்கள் ஜோதிஷம் எப்பொழுது முதல் இத்துறையில் உதவியளித்து வருகின்றதென்பதைக் கண்டறிவார் கள்.

## தற்கால விவாகம்

இப்பொழுது என்ன விபரீதங்கள் நடக்கின்றன! ஜாதகங் களைப் பரிசீலனை செய்கின்றார்கள். ஒரு சிறுவனுக்கும் ஒரு சிறு மிக்கும் முடிபோட்டு விடுகின்றார்கள். முதல் நாட் கல்யாணம் முதல் நான்காம் நாள் பிரவேச ஹோமம் வரை 4 நாட் கல்யா ணமும் பெண்வீட்டிலேயே பெண் வீட்டார் செலவிலேயே நடை பெறுகின்றது. பெண் பருவமடைந்ததும் புருஷன் வீட்டிற்க னுப்பப்பட வேண்டுமாயின் ஏற்கனவே பெண் வீட்டாருக்கு வரதக்ஷிணை 4 நாள் விவாகச் செலவு முதலிய செலவுகளுக்குத் துணையாய்ப் புதிதாக மணமகளின் தேவைகள் வேறு அதிகரிக் கின்றன. தற்காலம் ஹிந்து சாஸ்திரத்தில் பெண்களுக்கு இஷ்ட மானால் கணவனை விலக்கிவிட்டு மறுமணம் செய்துகொள்ளச் சுதந்திரமளிக்காத நிலையில் கன்னிப்பருவ விவாகம் வற்புறுத்தப் படுவதால் பெண்களின் நிலை மிகத் துக்ககரமா யிருக்கின்றது. பண்டைக் காலத்தில் மணமகன் மணமகளைத் தேடி வரும்படி தன் நண்பர்களை அனுப்புவது வழக்கமாயிருந்தது. இப்பொழுது பெண் ணின் தந்தை கட்டுச்சாதம் கட்டிக்கொண்டு மணமகனைத் தேடிச் செல்லும் விபரீதகாலமாய் மாறியிருக்கின்றது. எனவே மணமகன்

தரப்பாருடைய கொடுமைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றதைக் காண்கின்றோம். சுருங்கக் கூறின், புனிதமான விவாகபந்தனம், மனிதக் காளைகளின் விற்பனையாக மாறியிருக்கின்றது.

முதல் நாள் விவாகம் பெண் வீட்டிலும் மற்ற மூன்று நாள் விவாகம் பிள்ளை வீட்டிலும் நடந்துவந்த வழக்கம் ஒழிந்து நான்கு நாள் விவாகமும் அதன் செலவுகளும் பெண் வீட்டாரையே சார்கின்றன. இதுவும் தவிரப் பெண்ணைப் புக்ககம் அனுப்பிவைக்கும் செலவுகள் வேறு. தம்பதிகள் அறியாப் பருவத்தில் மணம் புரிகின்றனர். "தம்பதி" என்ற முதுமையான பதம் இருவர்களைக் குறிக்கிறதாயினும் தெய்விகத் தன்மையுடன் ஒருமை பெற்று விளங்குகின்றது. ஸ்மிருதிகளின் கருத்திற்கிணங்க மனைவி கணவனிற் பாதியாகின்றாள். அர்த்த நாரீஸ்வரர் என்ற தெய்வப் பெயரும் இப்பொருளையே விளக்கி நிற்கின்றது; எனினும் இத்தகைய உயர்ந்த மனோபாவங்கள் புறக்கணிக்கப்பட்டு விட்டன. நடைமுறையில் சம்பந்திகளிடையே ஒரு பெருத்த வியாபார முறையாகவும் பொழுது போக்குக்கான ஓர் வேடிக்கையாகவும் மாறிவிட்டது. இத்தகைய மாறுதல்கள் நன்மைக்கென யார் துணிந்து கூற முடியும்? இப்பொழுது நாம் காண்பதெல்லாம்:— நாளுக்கு நாள் ஸ்திரீகளின் கௌரவம் க்ஷீணமடைந்து வருகின்றது; விவாக வியாபாரத்தில் ஆடவர்களின் பேராசை; அனுவசியச் சடங்குகள், தொல்லைகள், செலவுகள் முதலியவை யதிகரிக்கின்றன; இவற்றையெல்லாம் காட்டிலும் நிராதரவாக விடப்படும் விதவைகள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றனர்.

எஜுர் வேதத்திலுள்ள விவாக மந்திரங்களின் பொருளைக் கவனித்தால் எந்தப் பண்டிதரும், அவைகள் வதூவரர்கள் நல்ல பருவம் வந்தவர்களாகவே யிருத்தல் வேண்டுமென்று சொல்வதாக திடமாய்க் கூறலாம்.மணமகள்பருவமடையாதபெண்ணாக ஒருக்காலும் இருக்க முடியாது. நாம் எக்காரியத்தையும் செய்ய ஆதாரமாகக் கொள்ளுவன ஸ்மிருதியும், ஸ்ருதியும். ஸ்ருதியே ஆதி ஆதாரமாகும். ஸ்ருதியே அனுபவ முறையாகும். ஸ்மிருதிக்கும் ஸ்ருதிக்கும் முரண்பாடேற்பட்டால் ஸ்ருதியின்படியே நடத்தல்பொருத்தமாகும். மண்ணிலிருந்து பாண்டம் உற்பத்தியாயிற்று; அது

போலவே ஸ்ருதியை யாதாரமாகக் கொண்டே ஸ்மிருதியும் உண்டாயிற்று. எனவே தவறுகளை யுணர்ந்து பால்ய விவாகத்தின் கொடுமைகளை யுணர்ந்து இனியேனும் பாரத நாடு சீர்ப்படுமாறு பிரார்த்திப்போமாக.

[இது டில்லியிலிருந்து வெளியாகும் "தர்ம ராஜ்யம்" என்ற பத்திரிகையில் வெளியான ஓர் ஆங்கிலக் கட்டுரையின் சாராம்சம்]

## கெமால் அட்டா டர்க்

துருக்கியின் தந்தை யென்றழைக்கப்பட்ட கெமால் அட்டா டர்க் சென்ற நவம்பர் மாதம் காலமானார். அரசியல் துறையில் அவர் ஒரு வீரராக விளங்கியது போலவே சமூகத் துறையிலும் ஒரு சிறந்த வீரராக விளங்கினார். தமது நாட்டுக்கு விடுதலை தேடியதுமன்றி, பல வழிகளிலும் அதைப் புனருத்தாரணஞ் செய்து புத்துயிரு மளித்தார். இந்த நூற்றாண்டில் அவர் ஒப்புயர்வற்ற யுத்த வீரன்; தன்னிகரற்ற அரசியல் நிபுணன்.



கெமால் அட்டா டர்க்.

மகாயுத்த காலத்தில், வீரர் கெமால் துருக்கியின் தலைவராக வந்திராவிட்டால், இன்று துருக்கியின் கதி என்னவாகியிருக்குமோ? ஒருவேளை நாட்டாசை கொண்ட ஐரோப்பிய வல்லரசுகளின் கையிலகப்பட்டு, ஒரு சுதந்திர நாடு என்றே யில்லாமல்

மறைந்து போயிருக்கவுங்கூடும். இவ்வித நிலைமை ஏற்படாவண்ணம் காத்தவர் கெமால் அட்டா டர்க். 'ஐரோப்பாவின் நோயாளி' யாயிருந்த துருக்கி, ஊக்கமும் உடலுறுதியும் பெற்று இன்று சுதந்திரத்துடன் விளங்குகின்றது.

பிறர் கொடுமைக்கு இலக்காகாமல் தன்னாட்டைப் பாதுகாத்த வீரன், அது என்றும் சுதந்திர நாடாக நிலைத்து நிற்க வேண்டுமென்ற நோக்கத்துடன், அரசியல் சீர்திருத்தத்துடன் சமூகச் சீர்திருத்தத்தையும் மிகுந்த தைரியத்துடன் புகுத்தினான். தற்கால நாகரீக தேசங்களைப் போன்று, அரசியலுக்கும் மதத்திற்கும் சம்பந்தமில்லாதபடி முதன் முதலாக அரசியல் முறை வகுக்கப்பட்டது. பழய திட்டங்களெல்லாம் மதபோதனைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன. அவற்றை அடியோடு மாற்றி, காலத்திற் கேற்ற ரீதியில் அமைத்தார். முல்லாக்கள், மௌல்விகள், மௌலானாக்கள் என்றழைக்கப்படும் மதபோதகர்கள், அல்லது குருக்கள் முதலியோருக்கு, அரசாங்க விஷயத்தில் எவ்வித ஆதிக்கம் அல்லது செல்வாக்கும் இல்லாதபடி செய்தார். நாடும் நாட்டுமக்களும், அதிக பலம் பெற்று, செழிப்புற்று, முன்னேற வேண்டுமென்ற நோக்கத்துடன், அரசியலில் எந்த விதமான மதக் கொள்கையும் கலக்காத வண்ணம் அதை வேறுபடுத்தினார்.

அதே நோக்கத்துடனேயே கல்வித் துறையிலும் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. பழய மத போதனா பாடசாலைகளெல்லாம் அழிக்கப்பட்டு, நவீன, முற்போக்கான கல்விச்சாலைகள் அமைக்கப்பட்டன. இஸ்லாத்தின் செல்வாக்கால் துருக்கி பாஷையில் ஏராளமான அரபுமொழிச் சொற்கள் கலந்திருந்தன. அவற்றையெல்லாம் ஒரேயடியாக அகற்றிவிட்டு, அவற்றிற்குப் பதிலாக தூய துருக்கி மொழிகள் புகுத்தப்பட்டன. இவை, நெடு நாட்களாக உபயோகத்தி லில்லாமல் ஒதுக்கப்பட்டிருந்தன. துருக்கி பாஷையில் சரியான வார்த்தைகள் கிடைக்காதபோது, புதுப்புது மொழிகள் ஆக்கப்பட்டன. அரபு எழுத்துக்களைத் தள்ளிவிட்டு அவற்றிற்குப் பதில் ரோமன் எழுத்துக்கள் வைக்கப்பட்டன. இதன்மூலம், படிப்பின்மை மிகுதியும் குறைந்து, கல்வி வெகு விரைவாக ஜனங்களிடையே பரவிற்று.

கடவுள் வணக்கத்தின்போது, அரபு மொழிகளையே உபயோகித்து வந்தனர். இவற்றை நீக்கி இவற்றிற்குப் பதிலாக துருக்கி மொழிபெயர்ப்பு சேர்க்கப்பட்டது. மசூதிகளில், கிறிஸ்தவப் பள்ளிகளைப் போன்று, வழிபடுவோர் அமர்வதற்கு ஆசனங்கள் போடப்பட்டன.

கெமால் அட்டா டர்க் தமது நாட்டில் ஏற்படுத்திய சமூகச் சீர்திருத்தங்கள் மிகவும் முற்போக்கானவை. பர்தா, முகமூடி, அந்தப்புரம்—எல்லாவற்றையும் ஒழித்து, துருக்கிப் பெண்களை விடுதலை செய்தார். ஆண்களைப் போன்று பெண்களுக்கும் கல்வி விஷயத்தில் சம சந்தர்ப்பம் அளித்தார். பல்வேறு உத்யோக வர்க்கங்களிலும் பெண்களுக்கு இடமளிக்கப்பட்டது. பலதார மணமுறை ஒழிக்கப்பட்டது. பெண்களுக்கு விவாக ரத்து உரிமையும் வழங்கப்பட்டது. பெண்களுக்கு ஓட்டுரிமை யளித்தார். தமது ஜனக்கட்சியில் பெண்களையும் சேர்த்துக் கொண்டார். பெண்கள் வக்கீல்களாகவும், டாக்டர்களாகவும், வருவதற்கு உதவி செய்ததுமன்றி, அவர்களை நீதிபதிகளாகவும், மாஜிஸ்திரேட்டுகளாகவும் நியமித்தார்.

——

எட்டுத்திக்கும் சென்று வெற்றி கூறுவோமே—உடன்
இந்நிலத்தில் மாதர் ஒன்று சேருவோமே
தட்டுக்கெட்ட சாதிமத பேதம் எல்லாம்—இந்த
தாரணியில் மாதருக்குள் இல்லை யென்போம்.

★

அச்சமடம் நாணம் பயிர்ப்பென்ப வெல்லாம்—நம்மை
அடக்கிவைக்கச் செய்த வஞ்ச விலங்கு காணீர்
நிச்சயமே சுதந்திர வாழ்வை நாடின்—இந்த
நீதியற்ற கட்டையெலாம் வெட்டி எறிவீர்.

—சாமி சிதம்பரனார்.

# மாதர் மகாநாட்டுத் தீர்மானங்கள்

சென்ற நவம்பர் மாதம் சென்னையில் பீகம் அமீருதீன் தலைமையில் நடைபெற்ற மாதர் மகாநாட்டில் சமூகச் சீர்திருத்தம் சம்பந்தமாகப் பல தீர்மானங்கள் நிறைவேறியிருக்கின்றன. அவற்றுள் முக்கியமான சில வருமாறு:—

## கல்வி.

வயது வந்தவர்களிடையே கல்வியைப் பரப்புவதன் அவசியத்தை இம்மகாநாடு வற்புறுத்துகிறது. கல்வியைப் பரப்பவவும், கல்லாத ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனியாக வகுப்புகள் நடத்தவும், மாதர் சங்கங்களும், தனி ஸ்தாபனங்களும் வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகிறது நகர சபைகளும், ஸ்தல ஸ்தாபனங்களும் இந்த முயற்சிக்கு உதவியளிக்குமாறும் வேண்டிக்கொள்கின்றது.

## பலதார மணத்தடை.

ஸ்ரீமதி சுப்பராயன் கொண்டுவந்துள்ள பலதார மணத்தடை மசோதாவை இம்மகாநாடு ஆதரிப்பதுடன், அதைச் சட்டமாக நிறைவேற்ற வேண்டிய நடவடிக்கைகளை உடனே எடுத்துக்கொள்ளும்படி மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றது.

## விவாகரத்தும் சொத்துரிமையும்.

டாக்டர் தேஷமுகின் ஹிந்து பெண்கள் விவாகரத்து மசோவினுடையவும், ஸ்ரீ ஜி. எஸ். மோதிலாலின் பலதார மணத்தடை மசோதாவினுடையவும்ஹிந்துப் பெண்கள் சொத்துரிமை சட்ட திருத்த மசோதாவினுடையவும் தத்துவங்களை இம்மகாநாடு ஆதரிக்கிறது.

## பொட்டுக்கட்டுக்குத் தடை

சென்னை அஸம்பிளியில் கொண்டுவர விருக்கும், பொட்டுக் கட்டுத்தடை மசோதாவை இம்மகாநாடு பலமாக ஆதரிப்பதுடன், சட்டசபையின் அடுத்த கூட்டத்திலேயே இதைச் சட்டமாக நிறைவேற்றும்படி கவர்ன்மெண்டைக் கேட்டுக் கொள்கின்றது.

பெண்களைப் பாதிக்கக்கூடிய சட்டமெதையும் நிறைவேற்று முன், மாதர் ஸ்தாபனங்களையும் கலந்து, அவற்றின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளுமாறு இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது. சென்னை கவர்ன்மெண்டார் அமுலுக்குக் கொண்டுவந்துள்ள மதுவிலக்குச் சட்டத்தை இம்மகாநாடு பாராட்டுவதுடன், இச்சட்டத்தால், வேலையில்லாமல் திண்டாடும் கள்ளிறக்குவோர்க்கு உதவி செய்யுமாறும் கேட்டுக் கொள்கிறது.

# மாதர் கல்வி அபிவிருத்தி

பெண் கல்வி சம்பந்தமாக, விசாரணை செய்து, ஆலோசனை சொல்லும்படி, மத்திய கல்வி ஆலோசனை சபையாரால் நியமிக்கப்பட்ட மாதர் கல்விக் கமிட்டியார், தங்கள் அறிக்கையைச் சமர்ப்பித்தனர். கிராமப் பெண்ணுக்கு, கல்வியின் அடிப்படையான தத்துவங்கள் கூட கற்பிக்கப்படுவது வரை, கிராமப் புனருத்தாரண விஷயத்தில் உண்மையான அபிவிருத்தி யேற்படுமென்ற நம்பிக்கைக்கு எள்ளளவும் இடமில்லையென்று கமிட்டியார் அபிப்பிராயப்பட்டுள்ளனர். ஆண் பாடசாலைகளிலே பையன்களுக்கு சுத்தம், சுகாதாரம், நல்வாழ்க்கையின் தத்துவம் முதலிய விஷயங்களைக் கற்பிக்கின்றோம். ஆனால், இப்பையன்கள் தங்கள் வீடு சேர்ந்ததும் தாம் படித்தவற்றை மறந்து விடுகின்றார்கள். ஆகவே, பெண்கள் கல்லாதிருப்பது வரை, நமது உபதேசமெல்லாம் வீண் சிரமமே யாகுமென்பது இக்கமிட்டியாரின் அபிப்பிராயமாகும்.

கல்வி சம்பந்தமாக இந்தியா முழுமையுமுள்ள புள்ளி விவரங்களைக் கமிட்டியார் நன்கு பரிசீலனை செய்த பின்னர், பெண் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள் முற்றும் அதிருப்திகரமாயிருக்கின்றன வென்று கமிட்டியார் கருதுகின்றனர். ஆரம்பக் கல்வி பயிலும் பெண்களின் விகிதாசாரம் மிகுதியும் உயர்த்தப்பட வேண்டும்.

ஆண்களுடைய பிரதமக் கல்வியபிவிருத்திக்கான திட்டங்கள் போடும் போது, அதே திட்டங்களுக் கிசைந்தவாறு பெண்

கல்வி யபிவிருத்திக்கான திட்டங்களேயும் சேர்ந்தாற்போல் போட்டு அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். இரு பாலாருடைய கல்வி யபிவிருத்திக்கும் பொருளாதார நிலே இடங்கொடுக்காது என்று காணுமிடங்களில், பெண்கல்விக்கே முதல் ஸ்தானமளிக்கப் படவேண்டும்.

புள்ளி விவரங்களேக் கணக்கிட்டுப் பார்க்கும்போது, 6 முதல் 11 வரையுள்ள வயதுடைய பிள்ளேகளில், பள்ளிக்கூடஞ் செல்ல வேண்டிய பெண்களில் 16½ சதமானம் பேர்தான் உண்மையாகப் பள்ளிக்கூடஞ் சென்று வருகின்றனரென்றும், ஆனல், பையன்களில் 50·3 சதமானம் பேர் படித்து வருவதாகவுந் தெரிகிறது. இந்தப் புள்ளி விவரங்கள் மாகாணத்துக்கு மாகாணம் தாரதம்மியப் பட்டு இருக்கின்றன. சென்னேதான் இவற்றுள் முதன்மை வகிக்கின்றது (28·3 சதமானம்). ஐக்கியம், மத்தியம், பீஹார் ஒரிஸா ஆகிய மாகாணங்களின் சதவிகிதம் முறையே 6·1, 7·6, 6 ஆகும்.

நன்கு தேர்ச்சிபெற்ற ஆசிரியர்கள் தேவை. ஆரம்பப் பள்ளி செல்லவேண்டிய வயதுடைய பெண்களில் நேர்பகுதிப் பேர் பள்ளிக்கூடஞ் செல்வதாயிருந்தாலும், இந்தியா முழுவதும் இன்னும் 151188 ஆசிரியர்கள் கூடுதலாகத் தேவைப்படுவர். 1935ல் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் தொகை 2500 தான்.

ஏராளமான பெண்கள், ஆண் பள்ளிக் கூடங்களில் படிக்கிருர்கள். பல பெண் பள்ளிக்கூடங்களிலுள்ள பயிற்சித் திறமைக் குறைவும் இதற்கு ஒரு காரணமெனினும், முக்கியமான குறை, போதிய அளவு பெண் பள்ளிக்கூடங்கள் இல்லாததுதான்.

ஆண் பெண் கூட்டுக்கல்வி முறை, கட்டிடம் தளவாடம் ஆகிய இனங்களில் செலவுக்குறைவுக்கு வழியே. கிராமப் பக்கங்களில் கூட்டுக்கல்வி முறையே முடிவான நோக்கமாக விருக்க வேண்டுமென்றும், தொகை அதிகமாயிருக்கு மிடங்களிலெல்லாம் தனிப் பள்ளிக்கூடங்களிருப்பதே நல்லதென்றும் கமிட்டியார் அபிப்பிராயந் தெரிவித்துள்ளார்கள். கூட்டுக்கல்வி சாத்தியப்பட வேண்டுமானல், அது பெண்களே உபாத்தியாயினிகளாக நியமிப்பதாலேயே முடியுமென்றும் கருதுகிருர்கள்.

ஆகவே, பெண்பள்ளிக்கூடங்களில் பெண்களேயே ஆசிரியைகளாக நியமிக்க வேண்டும்; ஆண் பள்ளிக்கூடங்களில் ஆரம்ப வகுப்புகளில் முடிந்தவரை தம்பதிகளாக இருக்கும் ஆசிரியர்களே நியமிக்கலாம். ஆண் பள்ளிக்கூடங்களில் பெண்களே நியமிப்பதானல் குறைந்த பட்சம் இரண்டு பெண்களேயாவது ஒரே சமயத்தில் நியமிக்கவேண்டும். பெண் கல்வி முன்னேறி வருகின்றது கண் கூடு. இருபது வருஷங்கட்கு முன் பள்ளிக்கூடஞ் சென்ற பெண்கள் தொகை 1,230,698; பத்து வருஷத்துக்கு முன் 1,842,352. இன்று 2,890,246. இந்த அபிவிருத்தி இன்னும் நீடித்திருக்குமென்பதற்குரிய அறிகுறிகள் இருக்கின்றன.

ஆரம்ப வகுப்புகளுக்கு பெண்களே சிறந்த ஆசிரியைகள். பெற்றோர்களுக்கு நம்பிக்கை ஏற்படும். ஏராளமாகக் கல்விப் பிரசாரம் நடத்துவார்கள். பெண்களுடைய தேகப்பயிற்சியிலும், விளையாட்டிலும் அதிக கவனம் செலுத்த முடியும். பக்கத்துப் பெண்களெல்லாம் ஆவலுடன் பள்ளியில் படிக்க வருவார்கள். பெண்களிடையே படிப்பின்மை குறையும்.

---

## மகளிர் இல்லத்திற்குப் புதிய இடம்

விதவைப் பெண்கட்கும் ஆதரவற்ற பெண்கட்கும் உதவியளிப்பதை நோக்கமாகக் கொண்டு அமராவதி புதூரில் சென்ற ஏப்ரல் மாதம் சென்னை அரசாங்க கல்வி மந்திரி கனம் டாக்டர் சுப்பராயனுல் இந்த மகளிர் இல்லம் திறந்து வைக்கப்பெற்று நடைபெற்று வருகிறது. அதற்கு அங்குள்ள சொ. முரு. பங்களா இனமாக அளிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஷெ இல்லத்திற்காக ஐம்பது ஏக்கர் நிலம் காரைக்குடி தேவகோட்டை மெயின் ரோட்டில் வாங்கப்பட்டிருக்கிறது. இந்த இடத்திற்கு ஷண்முகநாதபுரம் கல்லுப்பட்டி ரோடுகள் சந்திக்கு மிடத்திலிருந்து தொடங்கி தேவகோட்டை காரைக்குடி மெயின் ரோட்டில் நாலு பர்லாங்கு தூரம்வரை முகப்பு இருக்கிறது. அநேகமாக தை மாதத்தில் கட்டிடவேலை துவங்கப்படக் கூடும்.

# பழிக்குப் பழி

(M. M.)

சில நூற்றாண்டுகளுக்கு முன், நேப்பாள தேசத்திலே, தார்த் தாரி பரம்பரையினரில் அரை குறை அநாகரிகரான மாகர் எனும் வகுப்பினர் மலை வனங்களிலே வாழ்ந்து வந்தனர். மலைச் சாரலிலே அமைந்திருந்த செழிப்புள்ள பூமி; என்றும் பஞ்சமில்லை. அமைதியுடன் வாழ்ந்து வந்த இந்த வர்க்கத்தினரை, அடுத்தாற் போல் வாழ்ந்து வந்த திபேத்து சாதியினர் பல முறை தாக்கி வந்தனர். செழிப்புள்ள பூமியைக் கண்டு அவர்கள் பொறாமை கொண்டு, சிறிது சிறிதாக ஆக்ரமிக்கத் தொடங்கினர். இந்த படையெடுப்புகளின்போது, மாகர் வகுப்புத் தலைவன் ஒருவன் மிருகத்தனமாக எதிரிகளால் கொலை செய்யப்பட்டான். அவனது மனைவி அளவற்ற துயரத்தில் ஆழ்ந்தாள். மலை வகுப்பினரின் வீர ரத்தம் அல்லவா அவள் நரம்புகளில் ஓடியது? தன் துணைவனின் கொலைக்குப் பழி வாங்கியே தீருவதெனத் துணிவு கொண்டாள்.

ஃ ஃ ஃ

கஞ்சன் ஜங்கா மலையுச்சியிலிருந்து குளிர்ந்த இளங் காற்று வீசிற்று. மாகர் தலைவி—ராணி—தன் எதிரேயுள்ள இயற்கைக் காட்சியைக் கண்டு களித்துக் கொண்டிருந்தாள். கீழே அழு கைக் குரல் கேட்டது. அவளுடைய கணவனுடைய உடலை வீரர் கள் மேலே எடுத்து வந்தனர். கண்ட காட்சி அவள் கொண்ட சப தத்தை உள்ளத்தில் உறுதிப் படுத்திற்று. தந்திரத்தால் தன் எண் ணத்தை முடித்துக் கொள்வதெனத் தீர்மானித்தாள்.

ஃ ஃ ஃ

ரொம்ப நம்பிக்கையுடைய வீர னொருவனை அழைத்து அவ னிடம் தன் கருத்தை வெளியிட்டாள். வீரனும் இணங்கினான். இரு வரது முடிவுப்படி, இறந்துபோன தலைவனுடைய ஞாபகார்த்த மாக ஒரு பெரிய விருந்து நடத்தப்பட்டது. பக்கத்துக் கிராம மக் கள் அனைவரும்—எதிரிகள் உள்பட விருந்தில் கலந்துகொண்ட னர். மாகர் வகுப்பினர் முதலில் உண்டனர். எதிரிகள் உணவில்

ரகசியமாக விஷங் கலக்கப்பட்டது. விருந்து முடிவுற்றபோது எதிரிகளில் ஆயிரக்கணக்கானபேர் மாண்டனர். ஒரு பெண் பழிக்குப் பழிவாங்கிய இடத்தை 'டாங் ஸாங் பக்' (ஆயிரம்பேரைப் பழி வாங்கிய இடம்) என்று அழைக்கின்றனர்.

ஆனால், எதிரிகள் சும்மா விருக்கவில்லை. பெரும் படையாகத் திரண்டு அவர்கள் மாகர்வம்சத்தினரைத் தாக்கினர். ராணி ஆபத்துக்குள்ளாய்விட்டோமென் றஞ்சினாள். தனது ஆட்களுடன் மலையுச்சியிலிருந்த ஒரு மாளிகைக்குள் புகுந்தாள். எதிரிகள் புகமுடியாத இடம். ஆனால், இங்கும் நிம்மதியாக வாழ முடியவில்லை. எதிரிகள், கோட்டைக்குத் தண்ணீர் கொண்டுசெல்ல முடியாதபடி தடுக்கப்போகிறார்கள் என்ற செய்தி எட்டியது. ராணியின் மூளையில் ஒரு யுக்தி தோன்றியது. மாளிகையிலிருக்கும் தண்ணீர் அவ்வளவையும் திபேத்தியர் முகாமில் கொட்டுங்கள் என்று கட்டளையிட்டாள். தந்திரம் பலித்தது. மேலே கோட்டைக்குள் தண்ணீர் தாராளமாகக் கிடைக்கும் சுனையிருக்கிறதுபோலும்! நாம் நினைத்த சூழ்ச்சி பலிக்காது என்று எண்ணி அவர்கள் தம் பிரதேசத்துக்குத் திரும்பினர்.

ஃ ஃ ஃ

எதிரிகள் பின் வாங்கியதும், மாகர் தலைவி தைரியங்கொண்டு தன் ஆட்களைத் திரட்டிக் கொண்டு எதிரிகளை நோக்கிப் புறப்பட்டாள். ஆனால் எதிரிகளின் படை பலத்துக்கு முன், அவள் பலம் நிற்கவில்லை. சிறிது நேரத்தில் தலைவி எதிரிகளால் சூழப்பட்டாள். சிறிது தாமதித்தால் அவள் எதிரிகள் வசம் சிறைப்படுவது திண்ணம். எனவே தனது படைத் தலைவனை அழைத்து, எதிரிகள் வசம் சிக்குமுன் தன் உயிரை நீக்குமாறு வேண்டினாள். மாற்றானிடம் அகப்பட்டு மானபங்கப் படுவதைவிட, தன் உயிரை மாய்த்துக் கொள்வதே மேலென்று கொண்டாள். தலைவனின் கட்டாரி அவள் நெஞ்சில் பாய்ந்து உயிரைக் குடித்தது. மிகுந்த வீரத்துடன் அவள் தன் முடிவை ஏற்றுக் கொண்டாள். அவளது வீரத்தையும் தீரத்தையும் இன்றும், அம்மலை நாட்டினர் போற்றி வருகின்றனர்.

# மாதர்களும் மதமும்

(தி. நாராயணன், அமராவதிபுதூர்)

தமிழ் நாட்டில், மாதர்கள், மதத்தின் பேரால், பல மூட வழக்கங்களினுல் அடிபட்டு, சிதைந்து கிடப்பதை நாம் தினமும் காண்கிரும். மதம் என்பது என்ன? அதனுடைய கொள்கைகள் என்ன? எப்படிக் கடவுளின் அருள் பெறலாம்? என்பதை அவர்கள் அறிந்துகொள்ள விடுவதுமில்லை; தெரிந்தவர்கள் சொல்லிக் கொடுப்பதுமில்லை. பெண்களுடைய வாழ்நாள் முழுவதும் பழக்க வழக்கத்தினுல் அடிபட்டு, அதன் இன்பத்திலும், துக்கத்திலும் ஆழ்ந்து கிடக்கின்ருர்கள். அதிலிருந்து விடுபட, அவர்களுக்குப் படித்தவர்களும் உதவி செய்யவில்லை; பெண்களில் பெரியவர்களாய் உள்ளவர்களும் உதவி செய்வதில்லை. இதை நாம் சற்று கவனிப்போம்.

இப்பொழுது பெண்களுக்குக் கல்வி வேண்டுமென்பதை அதிகமாக மறுக்கிறவர்கள் கிடையாது. இவ்வளவு நாட்கள் கழித்தாவது, ஆண்களின் மனதில் பெண்களுக்குக் கல்வி கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் உதித்திருக்கிறது. ஆனுல், அது எப்படிப் பட்ட கல்வி கொடுக்க வேண்டும். பொதுக் கல்வியா? அல்லது அவர்கள் பழக்க வழக்கங்களைப் பெரியவர்கள் வகுத்தது போல் ஒட்டிப் போகவேண்டுமா? என்பது இன்னும் வாதத்திற்குள் இருக்கிறது. ஏனென்ருல், மதக்கல்வி வேண்டுமென்று எல்லோரும் சொல்லுகிருர்கள்.

## மதப் படிப்பு

மதம் என்ருல் என்ன? கடவுள் ஒருவர் இருக்கிருர். அவரைக்காண நன்மை செய்; தீமையை அகற்று; இது தான் ஒளவையார் வாக்கு. இதை விட்டு விட்டு, விபூதி பூசு; வெள்ளிக்கிழமை குளி; மஞ்சள் பூசு; மூக்கைக் குத்து; நகையைப் போடு; நடக்க முடியாத உடைகளை உடுத்திக் கொள்; சாவித்திரி, சீதை, கண்ணகி மாதிரி இரு; அரசமரத்தைச் சுற்றுவதிலும், பட்டினி கிடப்பதிலும், உனக்கு நல்ல கணவன் வருவான். இது போன்ற புத்தகங்களைப் படித்தால் மதம் வளரும் என்று அப்படிப் பட்டவைகளையே

போதிக்கிருர்கள். இதைவிட பெருந் தீமை வேறு உண்டா? இதிலும் அடிமையா? பெண்களுக்குத்தான், பிறப்படிமை, சோற்றடிமை, பொருளாதார அடிமை இவைகளை வகுத்து, ஏராளமான பழமொழிகளும், பாட்டுகளும், வசனங்களும் எழுதி வைத்திருக்கிருர்களே! அத்துடன் படிப்பிலும், மதம்பிடித்த பழக்க வழக்கங்களைப் படிக்கவேண்டுமா? மதப் படிப்பே சொல்லிக் கொடுப்பது கெடுதல். இவர்களே புத்தியினுல் பழகித் தெரிந்துகொள்ளவேண்டும். அதனுல் தான் இன்னும் பெண் கல்வி 100-க்கு 5 கூட வளரவில்லை. ஆண் கல்வியாவது 100-க்கு 10 வளர்ந்திருக்கிறது. பெண் படிப்போ மூன்று அரசர்கள் கையில் இருக்கிறது. அதாவது 14-வயது வரையில் தாய் தகப்பனுர் கையில். பிறகு, புருடன் கையில். பிறகு, மகன் கையில். ஏன் இப்படி வந்தது? அவர்களின் 'சோற்று'ப் பிரச்னைதான் முக்கிய காரணம்.

## மதமும் பெண்களின் சொத்தும்.

பெண்களுக்குத் தனிசொத்து கூடாது. இது மதத்தின் பிரதான வாக்கியம். மங்கம்மாளைக் கொன்றதும், இராஜ்யாவைக் கொன்றதும், இராணி அகல்யாபாய் செத்ததும், எல்லாம், அவர்கள் இராஜ்யம் ஆண்டதால். ஏன், எப்படி பெண்கள் இராஜ்யம் ஆளமுடியும்? பெண் அப்படி செய்தால் உலகம் பொறுக்குமா? ஆகையால் பல்பிடுங்கின பாம்புமாதிரி, ஆண்கள் செய்யும் நாடகத்தில், இவள் ஆடிக்கொண்டு வரலாமே ஒழிய, தானே வாழ்நாளை வகுத்துக்கொண்டு வாழ ஆற்றல் இல்லை. ஏன், 'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை!' ஆகையால், என்ன திறமை இருந்தாலும் சொத்து சுதந்திரமில்லாமல் இருந்தால், ஒன்றும் செய்ய முடியாது.

## வைதீகர்களும் பெண்களும்

பெண்களின் முன்னேற்றத்திற்கு எந்தச் சட்டம் கொண்டு வந்தாலும், சனுதனியும், வைதீகனும் அதை மதத்தின்பேரால் எதிர்க்க முன்வருவார்கள். ஏன் பெண்கள் முன்னேறிவிட்டால், இவர்களுக்கு இங்கு வேலை கிடையாது. சட்டமில்லாமல் பணம் திரட்ட முடியாது. பெண்களிடம் உயிரை வளர்க்கும் பொறுப்பு இருக்கிறபடியால், அதைக் காப்பாற்ற சில சமயங்களில், மூடப்

பழக்க வழக்கங்களுக்குப் போகவேண்டியிருக்கிறது. குழந்தைகளே எப்படி வளர்க்கலாம் என்ற உண்மை தெரிந்துவிட்டால் எல்லாம் சரியாய்விடும். சாரதா சட்டம், ரிஜிஸ்டர் கல்யாணம், பொட்டுக் கட்டுதலே ஒழித்தல், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்குதல், இவைகளே வைதீகமும், சனுதனியும்தான் எதிர்க்கிருர்கள்.

ஆகையால் பெண் மக்கள் அறிவு பெற்று விளங்க வேண்டுமானுல் பொது ஜனப் படிப்பைத் தழுவிப் படிக்க வேண்டுமே ஒழிய, பிரத்தியேகப்படிப்பு என்றும், மதப் படிப்பு என்றும், இவைகளேப் புகுத்தக் கூடாது.

---

# பத்திராதிபர் குறிப்புகள்.

## வீரர் மறைந்தார்

சமூகத்தில் பெரும் புரட்சிகரமான சீர்திருத்தங்களேச் செய்த கமால் அட்டா டர்க் மறைந்தார். துருக்கியின் தந்தை—உண்மையில் துருக்கி மக்களுக்குத் தந்தையாகவே விளங்கினுர் கமால்—துருக்கியில் பல சீர்திருத்தங்களேச் செய்து பிறருக்கு வழிகாட்டியாயிருந்தார். பெண்களுக்கு முக்காடு போட்டு மூலேயிலிருத்தும் வழக்கத்தை விரட்டியடித்தார் கமால். பெண்கட்காக அவர் ஆற்றிய பெரும் காரியங்கள் எதிர்ப்பின்றியே நடந்தனவென்பது குறிப்பிடத்தக்கது. ஒரு நாட்டிலுள்ள பெண்கள் விடுதலேபெற்ருல், அது எவ்வளவு சீரும் சிறப்பும் பெற்று, பிறர் போற்றும் வண்ணம் முன்னேறி மிளிரும் என்பதற்கு இன்றைய தினம் துருக்கி ஒரு உயரிய சான்ருக விளங்குகின்றது. "ஐரோப்பாவின் நோயாளி" யென்று கருதப்பட்ட துருக்கி, இன்று ஐரோப்பிய வல்லரசுகளின் மத்தியில் ஒரு சுதந்திர நாடாக விளங்குவதற்கு, காலஞ்சென்ற கெமால் அட்டா டர்க்கும் அவரது புரட்சிகரமான சமூகச் சீர் திருத்தங்களுமே காரண மென்பதி லேயமில்லே. அவரது பூதவுடல் மறைந்ததெனினும், அவரது புகழுடம்பு என்

றென்றும் நீடித்து நிற்கும். முன்னேற விரும்பும் ஜன சமூகங்கள் அவரது உதாரணத்தைப் பின்பற்றுமாக.

## சபாஷ் இந்தூர்!

இந்தூர் சட்டசபை கல்யாண மசோதாவைச் சட்டமாக நிறைவேற்றி விட்டது. இனி எல்லாக் கல்யாணங்களும் கட்டாய மாக ரெஜிஸ்தர் செய்யப்பட வேண்டும். 18 வயதுக்குட்பட்ட பையன்களுக்கும், 14 வயதுக்குட்பட்ட பெண்களுக்கும் கல்யாணம் நடத்தக் கூடாது. இந்த நல்ல காரியத்தைச் செய்யமுன் வந்த சட்டசபை அங்கத்தினர்களையும் மகாராஜாவையும் போற்றுகிறோம்.

## வரதக்ஷிணையை ஒழிக்க மறியல்

வரதக்ஷிணைக் கொடுமையைப்பற்றிப் பலமுறை எழுதியிருக்கிறோம். இக் கொடுமை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. மக்களை எவ்வளவு வாட்டியபோதிலும், இன்னும் ஒழிந்தபாடில்லை. ஒரு சிலர் சுலபமாகப் பணம் சேர்ப்பதற்கு இது ஒரு குறுக்கு வழியாயிருந்தபோதிலும், எண்ணற்ற குடும்பங்கள் இத் தொல்லையால் கடன் படுகுழியில் அமிழ்ந்து போயிருக்கின்றன. இதை ஒழிப்பதற்கு ஐக்கிய மாகாண ரெவனியூபோர்டு மெம்பர் ஸ்ரீ வி. என். மேத்தா ஐ. ஸி. எஸ். காசி ஹிந்து சர்வகலாசாலை பார்லிமெண்டைத் திறந்துவைக்கும்போது ஒரு வழியைக் குறிப்பிட்டிருக்கிறார். மாணவர்கள் இக்கொடுமையை ஒழிக்க விரதம்பூண வேண்டுமென்றும், அவசியமாயின் மறியலும் செய்யத் தயாராயிருக்க வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். சாதாரணமாக, வரதக்ஷிணை கேட்போர், தம் பிள்ளைகளின் படிப்பையோ அல்லது உத்யோகத்தையோ சாக்காகச் சொல்லியே பெருந்தொகை கேட்கின்றனர். ஆகவே ஸ்ரீ மேத்தா இக் கொடுமையை ஒழிக்க மாணவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டது சாலவும் பொருத்தமாகும். வரதக்ஷிணைக்கொடுமை ஒழியாது இருக்குமளவும், சமூகத்தில் பெண்கள் இன்னும் அடிமைகளாகவே கருதப்பட்டு வருகிறார்களென்பதுதான் பொருள்.

## பெண் குழந்தையா?

பெண் குழந்தை பிறந்ததும் துக்கப்படுவோர் எண்ணற்றோர். பெண் குழந்தை பிறந்ததெனக் கேட்டதும் உதட்டைப் பிதுக்குகின்றனர். ஆண் குழந்தைகளே பிறந்து கொண்டிருக்குமானால் சில ஆண்டுகட்குப் பின்னர் பெண்களென்ற பூண்டே அற்றுப்போகும் அல்லவா? இதன் காரணமென்ன? பெண் பிறந்தால் பெருஞ் செலவுக்கு ஏதுவென அஞ்சுகின்றனர். பெண்கள் சுதந்திரம்பெற்று, சொத்துரிமைபெற்று, ஆடவரைப்போன்ற சம உரிமை பெற்றால்தான் இந் நிலை மாறமுடியும். பெண் குழந்தை பிறந்தால் அதற்காகத் துக்கப்படுவதை விடுத்து சந்தோஷப்பட வேண்டும் என்று ஸ்ரீ மேத்தா கூறியுள்ளார். அந் நிலை எப்பொழுது ஏற்படும்? அன்று தான் சமூகம் நல்வாழ்வுக்குரிய பாதையில் வந்து விட்டது என்று உறுதி கொள்ளலாம். சமூக நன்மையைக் கோருவோர் ஸ்ரீ மேத்தாவின் நல்லுரைகளைக் கூர்ந்து கவனிக்க வேண்டுகிறோம்.

---

# :: நிகழ்ச்சிகள் ::

### இந்து-கிருஸ்தவ கலப்பு மணம்

காரைக்காலில் வணிக வகுப்பைச் சேர்ந்த ஸ்ரீ அப்பாவு செட்டியாருக்கும், கத்தோலிக் கிருஸ்தவ மதத்தைச் சேர்ந்த சௌபாக்கியவதி ஞானசுந்தரத்தம்மாளுக்கும் நவம்பர் 13-ட சீர்திருத்த முறையில் மணம் நடைபெற்றது.

### பீஹாரில் பெண் கல்வி

இந்தியாவிலேயே பெண் கல்வி மிக மோசமாயிருப்பது பீஹாரில் தான். இந்த நிலைமையைச் சீர்படுத்த கவர்ன்மெண்டு திட்டமிட்டிருக்கிறது. மாகாணம் முழுவதும் பள்ளிக்கூடங்கள் அமைத்து பெண் கல்வியைப் பரப்பப் போகிறார்கள்.

### ஸ்திரீ பெஞ்சு மாஜிஸ்டிரேட்

ஸ்ரீமதி கமலா சிவசுப்பிரமண்யம் தேவகோட்டை பெஞ்சுக் கோர்ட்டில் ஸ்பெஷல் மாஜிஸ்டிரேட்டாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

### மாதர் மகாநாடு

அகில இந்திய மாதர் மகாநாடு டில்லியில் டிசம்பர் கடைசி வாரத்தில் நடைபெறும். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சுமார் 300

பிரதிநிதிகள் விஜயம் செய்வார்கள். மகாநாட்டையொட்டி ஒரு சுதேசிப் பொருட் காட்சியும் நடைபெறும்.

## விபசாரத் தடை சட்ட அமுல்

கமலம்மாளும், கிருஷ்ணன் ஆசாரியும் விபசார விடுதி நடத்தியதாகக் காரைக்குடி போலீஸாரால் தொடரப்பட்டிருந்த வழக்கில் எதிரிகளுக்கு தேவகோட்டை ஜாயிண்டு மாஜஸ்டிரேட் நான்கு மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

## யூனிவர்ஸிட்டியில் ஸ்திரீ மெம்பர்

ஆந்திரா யூனிவர்ஸிட்டி ஸெனட் சபைக்கு மிஸ் ஸாக்கியா ஸாகிருடீன் (நெல்லூர் அடிஷனல் சப் ஜட்ஜின் புதல்வி) அங்கத்தினராக மே. த. சான்ஸலரால் நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்தப் பதவி வகிக்கும் முதலாவது முஸ்லீம் பெண்மணி இவர் தான்.

## ஜில்லா போர்டுக்கு ஸ்திரீ தலைவர்

கடப்பை ஜில்லா போர்டுத் தலைவராக ஸ்ரீமதி ராமசுப்பம்மா ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இவர் காங்கிரஸ் கமிட்டியின் சார்பாக நியமிக்கப்பட்டார். ஸ்ரீமான் கோடிரெட்டி எம். எல். ஏ. யின் மனைவியார்.

## கர்ப்பத்தடை அவசியமா?

பிரஜா உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்கான முறைகளைக் கையாளுதல் அவசியமென பம்பாய் அசெம்பிளியில் ஒரு தீர்மானம் வந்தது. ஜனத் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லையென்றும் ஜனத்தொகை வளர்ச்சியைவிட அதிகமாகவே உணவுப் பொருள் உற்பத்தியிருக்கிறதென்றும் சுகாதார மந்திரி கூறி தீர்மானத்தை எதிர்த்தார். பெரும்பாலான ஓட்டுக்களால் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது.

## ஸ்திரீகள் குத்துச் சண்டை

ஹோஷியார்பூரில் நவம்பர் 29-உ 2 ஸ்திரீகளுள் குத்துச் சண்டைப் போட்டி நடக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஸ்திரீகள் சொற்ப உடையுடன் கோதாவில் தோன்றுவதை ஆட்சேபித்து பல பொதுக் கூட்டங்கள் நடந்தன. டிக்கட்டு கொடுக்குமிடத்திலும் மறியல் செய்யப்பட்டது. இதனால் 2 பேரே டிக்கட் வாங்கினர். இதனால் 2 ஸ்திரீகளும் குத்துச் சண்டைக்காக கோதாவில் தயாராக ஆஜரான போதிலும் குத்துச் சண்டையைக் கைவிட வேண்டி வந்தது.

## பெண்களுக்குக் கைத்தொழில் கல்வி

“ஏழை பணக்கார ஸ்திரீகள் அனைவரும் இப்பொழுது பணத்திற்காக வேறொருவர் கையை எதிர்பார்த்திருக்கும் நிலைமை ஒழிய வேண்டும்; இது தொலைந்தால், அவர்களுடைய பல பிரச்னைகள் தீர்ந்து போய்விடும்” என்று ஹைதராபாத் மாதர் மகாநாட்டின் கூட்டத்தில் தலைமைவகித்த இளவரசி நிலன்பார் தமது பிரசங்கத்தில் குறிப்பிட்டார். ஸ்திரீகளின் பொ

ருளாதார விடுதலைக்குக் கைத்தொழில் கல்வியே சிறந்த சாதனமென்று அவர் கூறினார். ஸ்திரீகள் கிராமங்களில் சமூக சேவை செய்ய வேண்டிய அவசியத்தையும், குடிசைக் கைத்தொழிலில் ஈடுபட வேண்டியதன் அவசியத்தையும் அவர் விளக்கினார்.

## ரயில்வேயில் ஸ்திரீ இன்ஸ்பெக்டர்கள்

டிசம்பர் 22உ கூடிய இந்திய சட்டசபையில் ஸ்ரீமதி ராதாபாய் சுப்பாராயனின் கேள்விக்கு விடையளிக்கையில் ஸர் தாமஸ் ஸ்டூவர்ட் திருவிழாக் கூட்ட காலங்களில் ஸ்திரீ இன்ஸ்பெக்டர்களை வேலைக்குவைப்பது சாத்தியமா என்று ஆராய்ந்து பார்ப்பதாக வாக்களித்தார்.

## மாலை மாற்றுவது கல்யாணமாகுமா?

கோயிலுக்குப்போய், தெய்வத்தின் முன்பு நின்றுகொண்டு ஒரு ஆணும் பெண்ணும் வெறுமனே ஒருவருக்கொருவர் மாலைகளை மாற்றிக்கொண்டால் அது ஹிந்து சட்டப்படி கல்யாணம் செய்துகொண்டதாகுமா என்ற பிரச்னை சமீபத்தில் கல்கத்தா அடிஷனல் பிரதம மாகாண மாஜிஸ்திரேட் கோர்ட்டில் எழுந்தது. விவாகரத்துக்காக ஏற்பட்ட வழக்கில் ஹிந்துப்பெண் ராதா ராணி தாஸ் தேயின் சார்பில் கொடுக்கப்பட்ட மனுவில் நரேந்திர லால்தாஸ் என்பவருக்குச் சம்மன் அனுப்பி அவர் நியாயப் பிரகாரம் பெண்ணை மணக்காமல் அவளை ஏமாற்றி மணம் புரிந்துகொண்டதாக அவர் மீது குற்றம் சாற்றப்பட்டது. வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

## அட்டா டர்க் உயில்

துருக்கித் தலைவர் காலஞ்சென்ற அட்டா டர்க் தமது உயிலில், தமது சகோதரி, ஐந்து சுவீகாரப் புத்திரிகள் ஆகியோரின் சம்ரக்ஷணைக்குப் போதிய பணம் ஒதுக்கி வைத்திருக்கிறார். விமானம் ஓட்டுவதில் கீர்த்திபெற்ற குட்சன் என்ற ஸ்திரீக்கு ஒரு வீடு வாங்கிக்கொடுக்கப் பணம் ஒதுக்கியுள்ளார்.

## மாதர் திலகங்கள்

ஸ்ரீமதி பிரேமிளா வஸு, தனக்கு மண முடித்து ஐந்து வருஷத்திற்குப் பின், கலாசாலைக்குச் செல்லாமல் வீட்டிலிருந்தே படித்து, கல்கத்தா யூனிவர்ஸிட்டியில் 1932-ல் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறினார். பின்னர், ஐ. யஸ். ஸி., பி. எஸ். ஸி. பரீட்சைகளிலும் சிறப்புடன் தேறினார். இவ் வருஷம் யம். யஸ். ஸி. பரீட்சையில் இரண்டாவதாகத் தேறியிருக்கிறார். தனது குடும்ப வேலைகளையுங் கவனித்துக்கொண்டு, படித்து முடித்து பரீட்சையில் சிறப்புடன் தேறியிருப்பது பாராட்டத் தக்கது.

## ஸ்ரீமதி லீலாவதி தேசாய்

ஆமதாபாத் பீப்பிள்ஸ் கோவாபரேடிவ் பாங்கின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். சட்டமறுப்பு இயக்கத்தின்போது இவர் ஆறுமாதச் சிறைத்தண்டனை அனுபவித்தார். மாதர் முன்னே

ற்ற சம்பந்தமான ஸ்தாபனங்கள் பலவற்றில் இவருக்குத் தொடர்புண்டு. ஸ்ரீமதிபிந்துவாஸினிதேவி, பி. ஏ., பி. டி., யம். ஏ. பரீக்ஷையில், வங்காளி பாஷையில் முதல் வகுப்பில் முதலாவதாகத் தேறியிருக்கிறார். ரெஸியா சுல்தானு அஹமத் எனும் முஸ்லீம் பெண்மணி பெர்ஷிய மொழியில் முதல் வகுப்பில் தேறியிருக்கிறாள். கல்கத்தா யூனிவர்ஸிட்டி யம். யஸ். ஸி. பரீட்சையில் இவ் வருஷம் நான்கு பெண்கள் தேறியிருக்கின்றனர்:

## பெண் போலீஸ்

திருவாங்கூர் போலீஸ் படையில் 12-பெண்களைச் சேர்க்கப் போகிறார்கள். திருவனந்தபுரத்தில் மட்டுமின்றி, இதர ஜில்லாக்களிலும் பெண்கள் போலீஸ்வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்களென்று தெரிகிறது.

## மார்வாடிவீட்டில் மறியல்

கான்பூரில் ஒரு வயது முதிர்ந்தவனுக்கும், 14 வயதுப் பெண்ணுக்கும் மணம் நடப்பதாக இருந்தது. மார்வாரி வாலிபர்கள் சீற்றங்கொண்டெழுந்தனர். மாப்பிள்ளை இவ் விஷயமறிந்து பக்கத்து ஸ்டேஷனிலிறங்கி ஊருக்குள் வந்தான். எனினும் வாலிபர்கள் சளைக்காமல் பெண்வீட்டு வாயிலில் மறியல் செய்தனர். மார்வாரி வர்த்தகர்கள் மணம் நடக்கவேண்டிய தினத்தன்று ஹர்த்தால் அனுஷ்டித்தனர்.

## முஸ்லிம் ஸ்திரீ வக்கீல்

குல்னு அடிஷனல் செஷன்ஸ் கோர்ட்டில் நவம்பர் 29உ ஒரு பெண் சோர வழக்கில் விசாரணை. அதில் ஒரு கட்சியின் சார்பாக அவ்வூரிலேயே முதலாவது ஸ்திரீ அட்வகேட்டான ஸ்ரீமதி சகினு எம். பீகம் ஆஜராவதைப் பார்க்க கோர்ட் வாசலில் ஏராளமான கூட்டம். கோர்ட் ரூம் கண்ணாடி ஜன்னல்கள் தவிடுபொடி. கோர்ட் பியூன்களால் கூட்டத்தை சமாளிக்க முடியாததினால் போலீஸ் படை தருவிக்கப்பட்டது.

## அதிசயப் பெண்

லூஸியானுவில் (அமெரிக்கா) பதின்மூன்று வயதுடைய ஆலிஸ் பெல்லி கிர்பி என்னும் பெண் மிக அதிசயிக்கத்தக்க சக்தி வாய்ந்தவளாயிருக்கிறாள். ஒரு நாள் அவள் தனது தோழிகளுடன் விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது, சோர்வுற்று, வேடிக்கையாக அங்கிருந்த பியானோவை 'வாசி' என்றாளாம். உடனே என்ன அதிசயம்! பியானோ வாசிக்க ஆரம்பித்து விட்டது. அதுமட்டுமல்ல. மேசைகளெல்லாம் 'ஆடு' என்றவுடன் ஆடிக் குதிக்கத் தொடங்கி விட்டனவாம். இதெல்லாம் கட்டுக்கதையென்று சொன்னார்கள். ஆனால் ஒரு நாள் மூன்று பேர் ஒரு மேஜைமீதிருக்கும் பொழுது மேஜை குதித்தது; அவர்கள் தூக்கி யெறியப்பட்டனர். அவர்களில் ஒருவர் கல்வி இலாகா சூப்பிரண்டு.

## அமெரிக்காவில் குழந்தை மணம்

கென்றக்கியில் முப்பத்து நாலு வயதுள்ள ஒருவனுக்கும் பத்துவயதுச் சிறுமிக்கும் இரகசியமாக மணம் நடந்ததாம். போலீஸார் இவ்விஷயத்தை அறிந்து, பெண்ணையும் அவள் தாயையும் கைது செய்திருக்கின்றனர். புருஷன் ஒளிமறைவாகத் திரிகிறான்.

# சமூக சீர்திருத்தப் புத்தகங்கள்.


## "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு சகாயம்.

### கைம்பெண்ணின் கண்ணீர்.

இது ஆசிரியர் கே. வி. எஸ். வாஸ் அவர்களால் எழுதப்பட்டு மாதர் மறுமண சகாய சங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. இதில் விதவைப் பெண்கள் படுந்துயரமும் அதற்குச் செய்யவேண்டிய பரிகாரமும் தெளிவு படக் கூறப்பட்டுள்ளன. விதவா விவாகம் சுருதி—யுக்தி— அனுபவபூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட்டதென்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இக்கட்டுரை முதலாவது பரிசு பெற்றதாகும். விலை அணு ஒன்று. தபாற் செலவு வேறு.

### மான நஷ்ட வழக்கு.

இது பெண்ணுக்குப் பணம் வாங்கிச் செய்ததற்காக பெண்ணின் தம்பி மைனர், மேஜரான பிறகு தன் குடும்பத்திற்கு அவமானம் வந்து விட்டதென்று கோர்ட்டில் வழக்கிட்டு நீதிபெற்றதாக எழுதப்பட்ட ஒரு சிறு நூல். கோர்ட் நடவடிக்கையும் மலைவிழுங்கி முத்தப்ப செட்டியாரின் விசாரணை விவரங்களும் தீர்ப்பும் படிப்பவர்க்கு வெகு உற்சாக மூட்டக் கூடியன. விலை அணு ஒன்று. தபாற் செலவு வேறு.

### சொர்னவல்லி.

இதில் அடுத்தாள் வேலையின் அவஸ்தை, பிரிந்த காதலர்களின் பெருந் துன்பம், தீர்த்த யாத்திரைக்குப் பெண்கள் சென்று படும்பாடு, பச்சிளம் பெண்கள் விதவையராக்கப்படும்கஷ்டங்கள் முதலிய பகுதிகளும், விதவைப் பெண் வைக்கும் ஒப்பாரியும் படிப்பவர் உள்ளத்தை உருக்கிவிடுவது திண்ணம். உபந்யாசங்களும் மேற்கோள்களும் சந்தர்ப்பத்துக்கேற்ற இனிய பாட்டுக்களும் நிறைந்து விளங்கும். எளிய அழகான நடையில் அமைந்துள்ளது. இதன் விலை ரூ. 1—0—0. "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு மட்டும் 0—12—0. தபாற் செலவு வேறு.

### அமிர்தவல்லி மாலை.

இது நகரத்தார் பெருமையையும் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பையும் விளக்குகிறது. பால்யப் பெண்களை மணம் செய்வதும் அதை விதவையாக்கிக் கண்ணீர் வடிப்பதும் எவ்வளவு கொடுமை யென்பதையும், அதனுலேற்படும் இன்னல்களையும் படிப்பவர் மனத்தில் பசுமரத்து ஆணிபோல் பதியச் செய்யும்படி அமைந்துள்ளது. யாவரும் எளிதில் பாடக்கூடிய இனிமையான அம்மானைப் பாட்டில் பாடப்பட்டிருக்கிறது. விலை 0—4—0. "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு மட்டும் 0—3—0. தபாற் செலவு வேறு

**மானேஜர், மாதர் மறுமணம் ஆபீஸ், காரைக்குடி.**

REGD. No. M. 3603.

# சிறந்த புத்தகங்கள்.

## மாதர் மறுமணப் பாடல் திரட்டு.

இது ஒரு சிறந்த பாடல்புத்தகம். இதில் 27-பாடல்கள் அடங்கியுள்ளன, இலக்கிய பாடல்களும், புதுவகையான மெட்டுப் பாடல்களும் நிறைந்திருக்கின்றன, 64-பக்கமுள்ள இப் புத்தகத்தின் விலை இரண்டணுதான். தபாற்கூலி வேறு.

## ஜீவகாருண்யத் திருக்குறள்.

"வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்கும்" என்று புகழப்படும் திருக்குறளிலிருந்து ஜீவகாருண்ய சம்பந்தமான 20 குறளைப் பொருக்கிப் பெரிய எழுத்தில் பொழிப்புரையுடன் அச்சிடப் பட்டிருக்கிறது. பள்ளிக்கூட மாணவர் பயில்வதற்கு மிக இன்றியமையாதது. விலை அணு அரை. மொத்தமாக வாங்கினுல் விலை ச்காயமாகத் தரப்படும். தபாற்கூலி வேறு.

## மாதர் மறுமணம்.

இப் பெயர்கொண்ட அழகிய புத்தகம் மகிபாலன்பட்டி திருவாளர் மு. சின்னையா செட்டியாரவர்களால் இயற்றப்பெற்றது. அழகான நடை. நகரத்தார் சமூகத்திற்கு மாதர் மறுமணம் எவ்வளவு அவசியமென்பதற்குக் காரணங்களைப் பசுமரத்தாணியெனப் பதியும்படி எழுதியிருக்கிறுர்கள். உதாரணமாகக் கூறப்படும் ஏழு கதைகள் வியக்கத்தக்கனவாகும். அழகான புத்தகம் விலை 0—4—0 "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு 0—3—0 தபாற்சுலவு வேறு.

## காசில்லாமல் உபதேசம்.

பஞ்சாட்சர உபதேசம் செய்வதற்கு ஆடம்பாமும் அனுவசியமான தடபுடலும் வேண்டியதில்லை யென்பதற்கு வேண்டிய காரணங் இதில் விளக்கப் பட்டிருக்கிறது. அதோடு தண்ணீர் மந்திரமும் இதில் சொல்லப் பட்டிருக்கிறது. விலை அணு ஒன்று. தபாற்கூலி வேறு.

## மாதர் மறுமணம் பென்ஸில்

"விதவை மணமே விடுதலை அளிக்கும்" என்னும் வாக்கியம் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டுள்ள அழகான பென்சில். நல்ல நிறம். சுகமாக எழுதக்கூடியது. இந்தியாவில் செய்யப்பெற்றது.

| | |
|---|---|
| விலை பென்சில் 1-க்கு | 0—0—6 |
| டஜன் 1-க்கு | 0—5—0 |
| குரோஸ் 1-க்கு | 3—6—0 |

தபாற்செலவு வேறு.

Printed and Published by S. MURUGAPPA for the Mathar Marumana Sahaya Sangam at Kumaran Power Press, Karaikudi.

Editor: M. Maragathavalli.